தமிழ்ப் பொழில்

தஞ்சை, கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ௭	பிரசோற்பத்தி, பங்குனி	மலர் ௧௨

௨

கரிய அன்னப்பறவை

The Black Swan

புண்டிதர், திரு. அ. கந்தசாமிப்பிள்ளையவர்கள்,
தமிழாசிரியர், கும்பகோணம்.

"சங்கத் தமிழும் தளர்ந்து புறங்கொடுப்பப்—பொங்கு தமிழ் செய்சீர்ப் புலவர்பிரான்" என்றெடுத்தோதப்பெறும் கச்சியப்ப முனிவர் இயற்றியருளிய அரும்பெறற் பனுவல்களுள் ஒன்ருகிய பேரூர்ப் புராணத்தைப் படித்துவருங்கால்,

செய்யவாய்க் கருங்கயற்கண் வெண்முறுவற் பைங்தொடிக்கைப்
பையரா வகலல்குற் காரன்னம் படர்தலொடும்
உய்யலாந் திசையாதென் றுய்யான மருங்கடுத்த
வெய்யபூம் பணைக்கமலம் மேவியவெள் ளோதிமங்கள்

என்னும் அந்நாட்டுப் படலத்தின் 52-ஆம் செய்யுளின்பொருளை யுணர நேர்ந்தபொழுது, இரண்டாமடியில் வரும் காரன்னம் என்ற சொல்லுக்கு உண்மைப்பொருள் காணும் பான்மைய னயினேன். "வயலிற் கறுப்பு அன்னங்கள் புகுதலும், அங்கிருந்த வெள்ளையன்னங்கள் வெளியேறின" என்பதே இப்

பாடலின் கருத்தாகலான், இங்குக் கறுப்பு அன்னம் என்று குறித்தது யாரை? எனக் கருதியபொழுது அதனை இப்பாடலின் முற்பாடல் தெரிவித்தது. அது :—

கருங்களமர் களையென்னச் செங்கயற்கட் கடைசியர்கண்
மருங்குனெடுங் கொடிநுடங்க வளர்தானை மீச்செல்ல
நெருங்கியகை வளையொலிப்ப நிகரில்தம தவயவத்துக்
கொருங்கியலும் பகைமுடிப்ப வொளிர்நறும்பூம் பணையடுத்தார்

என்பது.

இதனால் கடைசியர் (பள்ளர் மகளிர்)களையே காரன்னம் என்றனர் என்பது தெரிந்தது. மருத நிலச் சார்பாலும், நடையாலும் அன்னத்தையொத்த அம்மகளிர்க்கு நிறத்தாலும் ஒப்புமை காணவேண்டிக் காரன்னம் உவமை கூறப்பட்டுள்ளது ஆதலின் **காரன்னம்** என்பது இல்பொருளுவமையாகல் வேண்டுமென்று முதலில் தோன்றிற்று. இதற்கு ஆதாரமாக, இராமாயணத்தில், 'ஒளியாற் சூரியனை யொப்பான் இராகவன்' என்று கூற வந்த **கம்பர்** அவனது கரிய நிறத்தைக் கருதிக் **கருஞ் சூரியனை** உவமை கூறிய

கண்டா மவையா யிரமுங் கதுவக்
கண்டா மரைபோற் **கருஞாயி** றெனக்
கண்டா னிமையோ ரிறைகா சினியின்
கண்டான் வருநான் மறையின் கனியை (சரபங்கர்-24)

என்னும் கவி நினைவுக்கு வந்து உதவிற்று.

இனி, **உள்பொருளுவமை** யாகவே கொண்டு, காரன்னம் என்பதற்கு வேறு பொருள் கண்டாலோவெனப் பின்னும் கூர்ந்து கருதியபொழுது, **காரன்னம்** (கரிய அன்னம்)=**மயில்** என்று பொருள் கொள்ளலாம்; அது, அம்மகளிர்க்குச் சாயலால் ஒப்புமை கூறப்பட்ட உவமையாகும் என்றும் தோன்றிற்று. இதற்கு ஆதாரமாக, **அகநானூற்றில்,** ஆன்வகையை (பசுவர்க்கத்தை)ச் சார்ந்த எருமையைக் "**காரான்**" என்று கூறிய

(மருதம்)

சேற்றுநிலை முனைஇய செங்கட் காரான்
ஊர்மடி கங்குலின் நோன்றளை பரிந்து
கூர்முள் வேலி கோட்டி னீக்கி
நீர்முதிர் பழனத்து மீனுட னிரிய
வந்தூம்பு வள்ளை மயக்கித் தாமரை
வண்டூது பனிமல ராரு மூர

என்னும் 46-ஆம் செய்யுள் நினைவுக்கு வந்தது.

இவற்றால், கரிய நிறத்தினராகிய பள்ள மாதருக்கு மயிலும், கரிய அன்னப்பறவையிருந்தால் அதுவும் உவமையாகலாம் என்று ஒருவாறு கொண்டும் உள்ளம் அமைதியுற்றிலது. அச்சொல் அப்பொருளில் வருதலுக்கு வழக்கும் ஆட்சியும் காணாமையின், பின்னும் இதுபற்றிக் கருதியிருந்த பொழுது, காரன்னம், இல்பொருளன்று; உள்பொருளே யென்பதும், அதற்கு வழக்கும், ஆட்சியும் உண்டென்பதும் அறிய வந்தன. அதனால் எனக்குண்டான மகிழ்ச்சியே இக்கட்டுரையையெழுதத் தூண்டிற்று.

சீவக சிந்தாமணியிற் குணமாலையா ரிலம்பகத்து, நீர்விளையாட்டுக்கண்டு வருவார் கூற்றினுள் ஒன்றாகவரும்

தாய்தன் கையின்மெல்லத் தண்ணென் குறங்கினெறிய
ஆய்பொன் னமளித்துஞ்சும் அணியார் குழவிபோலத்
தோயுந் திரைகளலைப்பத் தோடார் கமலப்பள்ளி
மேயவகையிற் றுஞ்சும் வெள்ளையன்னம் காண்மின்

என்னும் செய்யுளின் (330) உரையில், பல்கலை தேர் பேரறிஞராகிய உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் "வெள்ளையன்னம்—இனஞ்சுட்டிய பண்பு; காரன்னமு முண்மையின்" என்று உரைத்தனர். இந்நூற் பதிப்பாசிரியரும், தமிழ் மொழிக்குப் பெருநன்றி புரிந்துவரும் புலவர் பெருமானுமாகிய உயர்திரு, மகா மகோபாத்தியாய, உ. வே. சாமிநாதஐயரவர்கள், இச்சொல் பெரும்பாணாற்றுப் படையுரையிலும் காஞ்சிப் புராணம் இரண்டாங்காண்டத்திலும் வருவதாக விளக்கம் காட்டினர்; இவ்விளக்கம் அக்கரிய அன்னப் பறவையைக் கண்டு

பிடித்தற்குப் பெரும் துணையாயிற்று. இவ்வாறே ஆராய்ச்சித் துறையிலிறங்கும் பலருக்கும், அவர்கள் செய்து வைத்துள்ள வேலை, ஏற்ற ஊன்றுகோலா யுதவுவதை யறிஞர் அறிவர்.

அவ்விளக்கங் கொண்டு கண்ட பெரும்பாணாற்றுப்படை யடிகள் :—

வண்ட லாயமோ டொண்டுறை தலைஇப்
புனலாடு மகளி ரிட்ட பொலங்குழை
இரைதேர் மணிச்சிரல் இரைசெத் தெறிந்தெனப்
புள்ளார் பெண்ணைப் புலம்புமடற் செல்லாது
கேள்வி யந்தண ரருங்கட னிறுத்த
வேள்வித் தூணத் தசைஇ யவனர்
ஓதிம விளக்கின் உயர்மிசைக் கொண்ட
வைகுறு மீனிற் பையத் தோன்றும்-நீர்ப்பெயற்று-

என்பன (311—8) வாம். இவற்றின் உரை,

" விளையாட்டினையுடைய திரள்களோடே நீருண்ணும்துறையிலே கூடி, நீராடும் மகளிர் போகட்டுப் போன பொன்னாற் செய்த மகரக் குழையினை, இரையைத் தேடுகின்ற நீலமணி போலும் சிச்சிலி, தனக்கு இரையாகத் துணிந்து எடுத்ததாகப் பறவைகள் நிறைந்திருக்கின்ற பனையில் தனித்த மடலிற்போகாமல், நூற்கேள்வியையுடைய அந்தணர், செய்தற்கரிய கடனைச் செய்து முடித்த யாகசாலையினிடத்து நட்ட யூபத்தின் மேலேயிருந்து, சோனகர் கூம்பின் மேலிட்ட அன்ன விளக்குப்போல ....தோன்றும்.......ஊர் ; ஈண்டுக் காரன்னமென்றுணர்க'' என்பது.

இங்கு ஒளிரும் காதணியைக் கவ்விக் கொண்டிருக்கும் சிச்சிலிப் பறவைக்கு நூலாசிரியர் (கடியலூர் உருத்திரங்கண்ணனார்) அன்ன விளக்கை உவமை கூற, அதன் உரையாசிரியர் (நச்சினார்க்கினியர்) சிச்சிலியின் கருநிறத்தைக் கருதிக்குறித்த அன்னம்—காரன்னமாகும் என்று பொருந்த உரைத்தனர். இது சீவக சிந்தாமணியுரையில் தாம் கூறியதையே, கற்போருணருமாறு பொருத்திக் காட்டி வழங்கிய வாறும்.

இவற்றையெல்லாம் அறிந்துவைத்த புலவர்பிரான் கச்சியப்ப முனிவர், பேரூர்ப் புராணத்தன்றித் தமது மற்றொரு நூலாகிய காஞ்சிப் புராணம் இரண்டாங்காண்டத்தும் இவ் வழக்கை ஆண்டனராவர் என்பதும் அவ்விளக்கத்தால் (குணமாலையாரிலம்பக உரை விளக்கம்) விளங்கின உண்மையாம்.

அந்நூலுள், இறைவனரது திருக்கண் புதைத்த தோடத்தால், தமது திருமேனி கரியதாகப் பெற்ற உமாதேவியார் தவமுளுற்றும் பொருட்டுத் தடநீர் படிந்தது—காரன்னம் குளத்துள் மூழ்கலையொக்கும் என ஏற்ற உவமையாகக் கூறி,

சாரனங் குலாய்ப்படிந்த காட்சியொப்ப மெய்த்தவச்
சீர்புனைந்த காமர்மங்கை சென்றுமூன்று காலமும்
வார்தரங்க நீர்படிந்த வண்சுனைத் தடங்களும்
ஏர்புனைந்த தெய்வவாச மெங்கணுங் கஞற்றுமே
(காஞ்சிப் புராணம் கழுவாய்ப்படலம் 16)

என்னும் கவியால் இதனை யாண்டவாறும்.

இனி, வடமொழி நூலிலும் இக்காரன்னம் வழங்கப்படுகிறது. அம்மொழியார் இதனைக் **காதம்பம்** என வழங்குவர். **இரகுவமிசம்** என்னும் நூலில் இது கூறப்படுகிறது எனவும், அதனுள், இராகவன் சீதைக்குப் பல இட விசேடங்களையும் காட்டிக்கொண்டு வரும்பொழுது **யமுனையாறும் கங்கையாறும்** கலக்கும் காட்சியை வடநூற்பெரும் புலவராகிய **காளிதாச** மகாகவி பலபடப் புனைந்து காட்டுகையில் கூறுகின்றனரெனவும், அதனை அந்நூல் 13-ஆம் சருக்கத்து 54 முதல் 4 சுலோகங்களிற் காண்கவெனவும், அச்சுலோகங்களின் கருத்து,

"குற்றமற்ற வடிவையுடைய மாதே! இந்திர நீலமணியும் முத்தும் இடைமிடைந்துகோத்த மணிமாலைபோலவும், நீலோற்பல மலரும் தாமரை மலரும் மிடைந்து தொடுத்த மலர்மாலை போலவும், காரகிற் குழம்பும் வெண் சந்தனக் குழம்பும் கலந்த கலவை போலவும், இரவில் மர நிழல்களின் இடையிடையே காணப்படும் நிலா வெளிச்சம் போலவும், மாரிக்காலத்தில் இடையிடையே வெண்முகில்களைக் கொண்டுதோன்றும் நீல

வானம் போலவும் திருவெண்ணீறு பூசிய மேனியிற் பல கரும் பாம்புகளை யணிந்து பொலியும் சிவபெருமான் திருவுருவம் போலவும், வெள்ளன்னப் பறவைகளுடன் கலந்த காதம்ப மென்னும் காரன்னப்பறவைத் தொகுதியைப் போலவும் யமுனையாறும் கங்கையாறும் கலந்த காட்சியைக் காண்பா யாக என்பது எனவும் கூறுப.

இங்கு வெண்மை நிறத்தையுடைய கங்கை நதிக்கு வெள் ளன்னங்களை யுவமை கூறியது போலவே, கருமை நிறத்தை யுடைய யமுனைநதிக்குக் காரன்னங்களை யுவமை கூறியிருப்பது கருதத்தக்கது. நம் தமிழ்மொழியில் நச்சினார்க்கினியரையொப்ப வடமொழியில் மல்லிநாதசூரி யென்பார் பேருரை யாசிரியர் எனவும், அவர் இக்காரன்னத்தைப்பற்றி, "காதம்பம்—நீல ஹம்ஸம்; இவ்வாறு ஒரு பறவை யுண்டென்பதும், அது இன்ன பயனுடைத்தென்பதும்பற்றி இராஜவல்லபன் என்ற ஒரு மருத்துவப் புலவர் தாம் இயற்றிய சச்ருதம் என்னும் ஒரு வாகட வடநூலுள் "இது ஒரு பறவை; இதன் ஊன் பித்தம் முதலிய நோய்களைக் குணப்படுத்திக் குருதியைத் தூய்மை செய்து ஆண்மைத் தன்மையைப் பெருக்கி உடம் புக்குக் குளிர்ச்சியை யுண்டாக்கும்" என்று கூறியிருப்பதாக விளக்கியுள்ளார் எனவும் கூறுப.

சென்னை அகராதிக் குழாம் வெளியிடும் பகுதியில் (Tamil —Lexicon) "காதம்பம்—அன்னப் பறவையின் இனத்தைச் சார்ந்தது, புகைநிறம் வாய்ந்த சிறகையுடையது (Kadambam- A kind of swan with dark grey wings) என்று வரையப் பட்டுள்ளது.

நம் நாட்டில், நூல்களிலும் ஓவியம் சிற்பங்களிலும் காணப் படுவதன்றி நேரிற் காணப்படாமையால், அன்னம் என்னும் பறவையொன்றுஉண்டு என்பதே ஐயத்தின்பாற் படுவதாயிருக்க அதன் இனத்தைச்சார்ந்த கறுப்பு அன்னப் பறவையைப் பற்றி யிங்குக் கூறுவது ஒரு கதையே யாவதன்றி உள்ளதொரு பொருளினைக் கூறியதாக ஆகாதென்று பலர் கருதலாம். ஆனல்

ஆங்கிலமொழியிலுள்ள பல்பொருட் களஞ்சிய நூலில் (Encyclopedia of Britanica) 'இப்பறவைகள் இருக்கின்றன; இன்ன விடங்களில் வசிக்கின்றன; இன்ன இயல்புடையன.' என்றும் இவற்றைப்பற்றிய பிற குறிப்புக்களையும் வெளியிட்டிருத்தலால், இப்பறவை உள்பொருளே, இல்பொருள் (Fablous-bird) அன்று, என அறியக்கிடக்கும்.

அந்நூலில், இப்பறவைகள் கருமூக்கு அன்னம், கருங்கழுத்து அன்னம், கறுப்பு அன்னமென மூவகையினவென்றும், அவற்றுள் :—

(1) கருமூக்கு அன்னம், மூக்கு முழுவதும் கரியது; (அது கூவும்பொழுது அதன் குரலோசை சின்னம் அல்லது கொம்பு என்னும் வாச்சியம் ஊதுவதுபோற் கேட்கப்படுவதலால்)அதற்குச் சின்னம் ஊதுவோனென்று பெயர்; அவைகள் வட அமெரிக்காவில் உள்ளவை;

(2) கருங்கழுத்து அன்னம், கழுத்தில் மட்டும் கறுப்பையுடையது; அவைகள் தென் அமெரிக்காவில் வசிப்பவை;

(3) கறுப்பு அன்னம், பனிக்கட்டி போலும் நிறத்தையுடைய தூவிகளையும், படிந்த புகைபோலும் நிறத்தையுடைய இறகுகள் மூடிய உடலையும், பவளம்போன்ற மூக்கையும், அம்மூக்கில் பூண் பிடித்ததுபோற் சுற்றியுள்ள கீற்றையும் உடையது; இப்பறவைகள் ஆஸ்திரேலியாக் கண்டத்தில் இருக்கின்றன; இவற்றை அங்கு முதன்முதற் கண்டு பிடித்தவர், வில்லியம் விலாமிங்கு என்னும் பெயரையுடைய ஒரு டச்சுக்காரக் கப்பலோட்டி; அவர். 1697-ஆு ஜனவரி-மீ 6வுயில் இவற்றைக் கண்டு பிடித்தார்—என்றும் வெளியிடப்பட்டிருக்கிறது. இவற்றை ஷெ ஆங்கில நூலின் 26-ஆம் தொகுதி (Vol-XXVI)யிற் காணலாம்.

1. The Trumpeter Swan is a kind of swan in North America which has the bill wholly black.

2. The Black necked swan as its very name indicates has a black neck and is found in South America.

3. The Black Swan of Australia was first discovered on the 6th January 1697 by the Dutch navigater William Vlaming.

It hardly needs any description-the sooty black of general plumage is relieved by the snowy white of its white feathers and it coral-like bill banded withivory. புலவர் பிரான் கச்சியப்ப முனிவரின் வாக்கைக் குறிக்கொண்டு, மகா மகோபாத்தியாய உ. வே. சாமிநாத ஐயரவர்களின் விளக்கம்பற்றிச் சென்று கண்டறிந்த கரிய அன்னப்பறவைகளின் செய்திகள் இவையாம்.

இவற்றால், காரன்னம் இல்பொருளன்று; உள்பொருளே யென்பதூஉம் அதுபற்றிய வழக்கும் ஆட்சியும் இவையென்பதூஉம் பெற்றாம்.

காளமேகப்புலவரது காலம்.

திரு. T. V. சதாசிவப்பண்டாரத்தாரவர்கள்,
தமிழ்ப்பண்டிதர், கும்பகோணம்.

'ஆசுகவியால் அகிலவுலகெங்கும்-வீசுபுகழ்க் காளமேகம்' எனவும், 'வசைபாடக் காளமேகம்' எனவும் அறிஞர்களால் புகழ்ந்து கூறப்பெற்றுள்ள காளமேகப் புலவர் பாடிய பாடல்களைப் பலரும் படித்தின்புறுதலை யாண்டுங்காணலாம். இத்தகைய பெருமை வாய்ந்த புலவர் பெருமானது வாழ்க்கையின் வரலாறு நன்கறியப்படவில்லையாயினும் இயன்றவரையில் அதனை யாராய்ந்து சிலர் வெளியிட்டுள்ளனர். அங்ஙனம் வெளியிட்டுள்ளோர் நம்புலவர் வாழ்ந்தகாலம் யாது என்பதைச் சிறந்த சான்றுகளுடன் விளக்கினரில்லை. எனவே, அவர் வாழ்ந்த காலத்தை ஆராய்ந்து துணிதல் தமிழ் இலக்கிய வரலாற்றை ஆராய்வார்க்குப் பெரிதும் பயன்படும் என்பது திண்ணம்.

இனி, காளமேகப்புலவர் பாடியுள்ள சிலேடைப் பாடல்களில் திருமலைராயன் என்ற மன்னன் ஒருவன் குறிக்கப்பட்டிருத்தல் யாவரும் அறிந்த செய்தியாகும். அப்புலவர் அவ் வேந்தன் தமக்குச் செய்த பேருதவியைப் பாராட்டிப் பாடிய பாடல் ஒன்று தமிழ் நாவலர் சரிதையில் காணப்படுகின்றது. அஃது,

இந்திரன் கலையா யென்மருங் கிருந்தான்
அக்கினி யுதரம்விட் டகலான்
எமனெனைக் கருதா னரனெனக் கருதி
நிருதிவந் தென்னையென் செய்வான்
அந்தமாம் வருண னிருகண்விட் டகலான்
அகத்துமக் களுக்குமப் படியே
அநிலமா மரியே யமுதமாய் வருவன்
ஆரெனை யுலகினி லொப்பார்
சந்தத மிந்த வரிசையே பெற்றுத்
தரித்திர ராசனை வணங்கித்
தலைசெயு மென்னை நிலைசெய் கல்யாணிச்
சாளுவத் திருமலை ராயன்
மந்தரப் புயனுங் கோப்பைய னுதவு
மகிபதி விதரண ராமன்
வாக்கினாற் குபேர னாக்கின னிவனே
மாசிலீ சானனு னவனே * என்பதாம்.

வறுமை நோயினால் பற்றப்பட்டு வருந்திக் கொண்டிருந்த தம்மைப் பெரிதும் ஆதரித்துக் குபேரன் போன்ற செல்வமுடையவனாகும்படி செய்தவன் சாளுவமன்னனாகிய திருமலை

* இந்திரன் கலையாய் என்மருங்கிருந்தான் என்பது இந்திரனுக்கு ஆயிரங்கண்களாதலின் நான் கட்டியிருக்குந் துணி ஆயிரம் பீறல்களையுடையது என்றதாம். அக்கினியுதரம் விட்டகலான் என்பது வயிற்றில் பசி நீங்காதென்றதாம். வருணன் இருகண் விட்டகலான் என்பது கண்கள் எப்பொழுதும் அழுது நீரோடிக் கொண்டிருக்கும் என்றதாம். அநிலமாம் அரியே அமுதமாய் வருவன் என்பது வயிற்றுக்குணவு வாயுவே என்றதாம். இப்பாட்டில் இந்திரன் முதலான அட்டத்திக்குப் பாலகர் பெயரும் வரிசையாய் வந்தமை காண்க.

ராயன் என்பதையும் அவன் விதரண ராமன் என்ற வேறொரு பெயரும் உடையவன் என்பதையும் கோப்பையின் புதல்வன் என்பதையும் இப்பாடலில் அப்புலவர் கூறியுள்ளார். திருமலை ராயன் என்ற ஓர் அரசனது கல்வெட்டுக்கள் நம் சோழமண்டலத்தில் பாபநாசம், தஞ்சாவூர், திருவானைக்கா முதலான இடங்களில் காணப்படுகின்றன. எனவே, இவ்வேந்தன் இந் நிலப்பரப்பை ஒரு காலத்தில் ஆட்சிபுரிந்திருத்தல்வேண்டும் என்பது நன்குபுலப்படுகின்றது அரிசிலாற்றுக்கும் முடிகொண்டான் ஆற்றுக்கும் இடையில் ஓடுகின்ற திருமலைராசன் என்ற ஆறு இவனது ஆட்சிக்காலத்தில் வெட்டப் பெற்றதேயாகும். அன்றியும், காரைக்காலுக்குத் தெற்கே ஆறு மைல் தூரத்திலுள்ள திருமலைராசன் பட்டினமும் இவ்வேந்தன் பெயரால் அமைக்கப்பெற்ற நகரமாகும். இவனது ஆட்சிக்காலத்தை நன்கு விளக்கக்கூடிய கல்வெட்டொன்று தஞ்சையிலுள்ள இராசராசேச்சுரம் என்ற திருக்கோயிலில் உள்ளது. அது '(2) சுபமஸ்து சகாப்தம் ஆயிரத்து முன்னூற்று எழுபத்தேழின்மேல் செல்லாநின்ற பவ வருஷத்துக்குச் செல்லும் (3) யுவ வருஷம் சித்திரை மாதம் ௫.................ஸ்ரீமந் மகாமண்டலேஸ்வரன் மேதினீஸ்வரன் கண்ட கண்டாரி சாளுவ சாளுவத் திருமலை தேவ (4) மகாராசர் தஞ்சாவூர் வ.................ண்டபம் தஞ்சை மாமணிகண்டங்குறை, நாகளாபுரம், பழமாறன் ஏரி, அன்பதின்மேலகரம் (5) வேலங்குடி, அம்மையப்பபுரம், தென் அளூர், கருப்பூர், மருவூர், இராசேந்திர சோழநல்லூர், சுங்கந்தவிர்த்த சோழ நல்லூரான (6) திருமலைராசபுரம், சமுத்திர........புரம், ஆக இந்த அகரங்களில் வாரியன் கரனத்தானுக்கு நிருபம் தங்கள் அகரங்களுக்கு அவதாவக (7) ச்கனை ராஜ ஸபக்கனை பிரதாநிஜோடி கரணிக்கஜோடி தலையாரிக்கம் மாவடை மரவடை குளவடைமற்றும் (8) எப்பேர்ப்பட்ட பலஉபாதிகளும் இழித்துவிட்ட அளவுக்குச் சந்திராதித்தவரையும் சர்வ மானியமாக சுகமே இருக்கவும் (9) ராஜாவின் அருளிச்செயல்படிக்கு மந்திரமூர்த்தி வெட்டிபது*' என்பதாம்.

* South Indian Inscriptions Vol II No 23 ; page 118.

இக்கல்வெட்டு, சாளுவமன்னனாகிய திருமலைராயன் என்பான் சகம் 1337-ஆம் ஆண்டில் சில ஊர்களைச் சர்வமானியமாக விட்ட செய்தியை உணர்த்துகின்றது. எனவே, இது, கி. பி. 1455-ஆம் ஆண்டில் நிகழ்ந்ததென்றும். இக்கல்வெட்டில் குறிக்கப்பெற்றுள்ள சாளுவத் திருமலைராயன் என்பவனே காளமேகப் புலவரால் ' கல்யாணிச் சாளுவத் திருமலைராயன்—மந்தரப்புயனுங் கோப்பையனுதவு மகிபதி விதரணராமன் ' என்று புகழ்ந்து பாடல்பெற்ற பெருமை வாய்ந்தவன் என்பது நன்கு துணியப்படும். சாளுவமன்னனாகிய இத்திருமலைராயன் என்பான் விசயநகர வேந்தர்களது பிரதிநிதியாகவிருந்து சோழமண்டலத்தை ஆட்சிபுரிந்தவன் என்பது ஆராய்ச்சியால் புலப்படுகின்றது. இவன் காலத்தில் விசய நகரத்தில் வீற்றிருந்து அரசாண்ட மன்னர்கள் மல்லிகார்ச்சுனராயர் விரூபாக்ஷராயர் என்போர். இவர்களது பிரதி நிதியாகவிருந்து தமிழ்நாட்டை ஆட்சிபுரிந்த சாளுவத் திருமலைராயன் கி.பி. 1455-ஆம் ஆண்டில் நிலவிய செய்தி மேலே குறித்துள்ள தஞ்சைக் கல்வெட்டால் நன்கு அறியப்படுகின்றது. ஆகவே, இம்மன்னனால் ஆதரிக்கப்பெற்ற நம் காளமேகப் புலவர் கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டின் இடையில் வாழ்ந்தவராதல் வேண்டும், இங்ஙனம் கல்வெட்டுக்களின் துணைகொண்டு உறுதி செய்யக் கூடிய பிற புலவர்களது காலங்களையும் ஆராய்ந்து அமயம் நேர்ந்துழி நம் தமிழ்ப்பொழிலில் வெளியிடுவேன்.

கம்பர் உவமக்கவின்.

பண்டிதர், திரு. R. P. அமிர்தலிங்கம் பிள்ளையவர்கள்,
போர்டு உயர்தரப்பள்ளிக்கூடம், நன்னிலம்.

(முற்றொடர்ச்சி 397.)

இனி, இயற்கைத் தோற்றம், இயற்கையாக நிகழ்கின்ற செயல், முதலியவற்றிற்கு ஏற்றவாறு உவமை கூறுகின்ற அழகையும், அவற்றையே இடத்திற்கேற்றவாறு உவமை

யாக்கிக்கூறும் அழகையும், பலவிடங்களிற் காணலாம். அவற்றுட் சிலவருமாறு.

மையறு மலரி னீங்கி யான்செய்மா தவத்தின் வந்து
செய்யவ ளிருந்தா ளென்று செழுமணிக் கொடிக ளென்னும்
கைகளை நீட்டி யந்த கடிநகர் கமலச் செங்கண்
ஐயனை ஒல்லை வாவென் றழைப்பது போன்ற தம்மா (27)

இச்செய்யுளில், இராமர், இலக்குவனோடு விசுவாமித்திரரைப் பின் தொடர்ந்து மிதிலைக்கு அண்மையிற் சென்றபொழுது, அம்மிதிலை நகரத்தின் மாடங்களின் மீதுள்ள கொடிகள், காற்றினால் இயற்கையாக அசைந்து கொண்டிருந்த தோற்றம், யான் செய்த தவத்தால் இலக்குமி என்னிடத்து வந்திருக்கின்றாள், ஆகலின் நீயும் விரைந்து வருக என்று அம்மிதிலை நகர், கொடிகளாகிய கைகளை நீட்டி இராமனை அழைப்பதை ஒத்திருந்தது எனக் கூறுகின்றார்.

எண்டருங்கடை சென்றயாமம் இயம்புகின்றன ஏழையால்
வண்டுதங்கிய தொங்கல்மார்பன் மயங்கிவிம்மிய வாறெலாம்
கண்டுநெஞ்சு கலங்கியஞ்சிறை யானகாமர் துணைக்கரம்
கொண்டுதம்வயி றெற்றியெற்றி விளிப்பபோன்றன கோழியே

விடிவதற்கு முன் கோழி கூவுவதும், அது கூவும்பொழுது சிறகுகளை அடித்துக்கொண்டு கூவுவதும் இயல்பு. இங்குத் தயாதன், கைகேயி கேட்ட வரங்களிரண்டினையும் மறுக்க முடியாதவனாய் அவள் கேட்டவாறே கொடுத்துவிட்டு, சோர்வுற்றுக் கிடக்கும் அவ்விரவின் நான்காம் யாமத்தில், கோழி கூவியது, கைகேயியால், தயரதன் அடைந்த துன்பங்களை யெல்லாங்கண்டு, மனங்கலங்கி, சிறகுகளாகிய கைகளால், வயற்றில் அடித்துக் கொண்டு கூக்குரலிடுவதை ஒத்திருந்தது எனக் கூறுகின்றார்.

பொய்வினைக் குதவும் வாழ்க்கை அரக்கரைப் பொருந்தி அன்னார்
செய்வினைக் குதவியாகச் செல்பவர் தடுப்ப தேய்க்கும்
மைவிளக் கியதே யன்ன வயங்கிருள் துரக்க வானம்
கைவிளக் கெடுத்த தென்ன வந்தது கடவுட் டிங்கள். (29)

இக்கவியில், வனம் செல்லப் புறப்பட்ட இராமர், தன்னைப்

பின் தொடர்ந்த நகரமாந்தர் முதலாயினரோடு, அயோத்தியைப் பிறகிட்டு, ஓர்சோலையில் வந்து சேரவே சூரியன்மறைந்து விட்டபடியால், அவ்விரவு, அவ்விடத்திலேயே அனைவரும் தங்கியிருந்தபொழுது, அந்நாள் பிறபக்கத்தைச் சார்ந்ததாகலின், முன் இருள் சூழ்ந்திருந்து, பின் சந்திரோதயமான தோற்றத்தை, தீவினைகளையே செய்கின்ற அரக்சர்களோடு சேர்ந்து கொண்டு, அவர்கட்கு உதவியாக, அவர்களை அழிப்பதற்காகச் செல்லுகின்ற இராமர் முதலியோரைச் செல்லவொட்டாது தடுப்பதை யொத்துச் சூழ்ந்திருந்த இருள் நீங்குமாறு, செல்பவர்க்கு உதவியாக ஆகாயம் கை விளக்கெடுத்துக் காட்டிய தொப்பச் சந்திரன் உதயமாயிற்று எனக் கூறும் நயம் மிக்க இன்பந்தருவ தொன்றாகும்.

இருக்கின் மொழியா ரெரிமுகத்தினீந்தநெய்யி னவிர்பசும்பொன்
உருக்கி யனைய கதிர்பாய அனல்போல் விரிந்த துயர்கமலம்
அருக்க னெய்த அமைந்தடங்கி வாழா வடாத பொருளெய்திச்
செருக்கி யிடையே பொருளிழந்த சிறியோர் போன்றசேதாம்பல்

வேள்வித் தீயிற்பெய்த நெய்யைப்போன்று, உருக்கியபொன்னை யொத்த சூரிய கிரகணங்கள் பாய, சிறந்த தாமரைகள் அனல் போன்று மலர்ந்தன. சூரியோதயமானவுடன் தகாத வழியிற் பொருளை யீட்டி, அமைந்தடங்கி வாழாது தருக்குற்று, அப்பொருளை இடையேயிழந்த அற்பர்களைப்போன்று அல்லிமலர்கள் குவிந்தன எனக்கூறும் இச்செய்யுளில், சூரியோதயமானவுடன் இயல்பாக மலர்கின்ற தாமரைக்கும், குவிகின்ற அல்லிக்கும் கூறும் உவமைகள் போற்றத் தக்கனவாகும்.

ஏய்வினை யிறுதியிற் செல்வ மெய்தினன்
ஆய்வினை மனத்திலான் அறிஞர்சொற் கொளான்
வீவினை நினைக்கிலான் ஒருவன் மெய்யிலான்
தீவினை யெனவிருள் செறிந்த தெங்குமே. (31)

நல்வினை தீவினைகளை ஆராய்ந்தறியும் அறிவில்லாதவனும், அறிஞர்களின் உறுதிமொழிகளைக் கேளாதவனும் தனக்குவரும் அழிவை எண்ணாதவனும், உண்மையைக் கைவிட்டவனும்,

நல்வினைப் பகுதியின் கடைசிக் காலத்தில் செல்வ மெய்தப் பெற்ற ஒருவன் செய்யும் தீவினைபோன்று இருள் சூழ்ந்தது.

ஆண்டப் பிறைநீங்கலும் எய்திய தந்தகாரம்
தீண்டற் கெளிதாய்ப் பலதேய்ப்பன தேய்க்கலாகி
வேண்டிற் கரபத்திரத் தீர்த்துவிழுத்தலாகிக்
காண்டற் கரிய பலகந்து திரட்டலாகி. (32)

முருடீர்ந் திருட்டற் கெளிதென்ப தென்முற்று முற்றிப்
பொருடீங்கில் கேள்விச் சுடர் புக்கு வழங்க லின்றிக்
குருடீங்கி தென்னக் குறிக் கொண்டு கண்ணோட்டங் குன்றி
அருடீர்ந்த நெஞ்சிற் கரி தென்பதல் வந்த காரம். (33)

கையால் எளிதில் தொட்டுணரக் கூடியதாய், தேய்க்கப்படுவதற் குரிய (சந்தனக் கட்டைபோன்ற) பொருள்களைத் தேய்த்துக் கொள்ளத் தக்கதாய் விரும்பினால் கை வாளினால் அறுத்துத் தள்ளுதற் குரியதாய், பார்ப்பதற்கு அழகான பல தூண் களாகத் திரட்டிவைக்கத் தகுந்ததாய் இருள் வந்து சேர்ந்தது; திண்மையால் அவ்வாறிருந்த அவ்விருள் கருமையால், குற்ற மற்ற நல்ல நூற் கேள்வியாகிய ஒளி சிறிதும் உட்புகுந்து விளக் கப்பெறுமையால் இவ்வுலகில் இதுவே குருடென்றீ சொல்லத் தகுந்த கண்ணோட்டம் (தாட்சண்யம்) இல்லாத, இரக்கம் சிறிதுமற்ற நெஞ்சை ஒத்திருந்தது. இச்செய்யுட்களில் இரு ளின் தன்மையைக் கூறியிருத்தலையும், அதற்குக் கூறியுள்ள உவமை நயங்களையும் காண்க.

சேயகாலம் பிரிந்தகலத் திரிந்தான் மீண்டும் சேக்கையின்பால்
மாயன் வந்தான் இனிவளர்வா னென்று கருதி வருந்தென்றல்
தூயமலர் போல் நுரைத் தொகையும் முத்துஞ் சிதறிப்
[புடைசுருட்டிப்
பாய லுதறிப் படுப்பதே போன்ற திரையின் பரப்பம்மா. (34)

இச்செய்யுளில், இராமர் குரங்குப் படைகளுடன் கடற்கரையை அடைந்தபோது, அக்கடலில் வீசிக்கொண்டிருந்த அலைகளின் தோற்றம், கடலில் துயின்று கொண்டிருந்த திருமால் அதனை நீங்கி நீண்டகாலமாக எங்கோ சென்றிருந்து மீண்டும் வந்திருக்

கின்றார், இனித் துயில் கொள்வாரென்று கருதி, தென்றற் காற்றானது மலர்களைப்போல், நுரைகளையும் முத்துக்களையும், சிதறி, படுக்கையைச் சுருட்டி உதறி விரிப்பதை ஒத்திருந்தது எனக் கூறுகின்றார்.

இந்துவன்ன நுதற்பேதை யிருந்தாள் நீங்கா இடர்க்கொடியேன்
தந்தபாவை தவப்பாவை தனிமை தகவோ எனத் தளர்ந்து
சிந்துகின்ற நறுந்தரளக் கண்ணீர் ததும்பத் திரைத்தெழுந்து
வந்து வள்ளல் மலர்த்தாளில் வீழ்வ தேய்க்கும் மறிகடலே (35)

மகா பாவியாகிய நான் அருமையாகப் பெற்ற தவப்பாவை தனித்திருப்பது தகுதியோ வென்று கதறிக்கொண்டு வந்து இராமர் பாதத்தில் விழுந்து அழுவதை ஒத்திருந்தது அலை வீசுகின்ற கடலின் தோற்றம் என மேற் கூறியதனையே பிறிதோராற்றால் உவமையாக்கிக் கூறுதல் காண்க.

இவ்வாறே, இராமர், இலக்குவனோடும், சீதையோடும் கோதாவிரி நதிக்கரையை யடைந்தபோது அதன் தோற்றத்தைக் கூறப்புகுந்த கம்பர்,

புவியினுக் கணியா யான்ற பொருள்தந்து புலத்திற் றாகி
அவியகத் துறைகள் தாங்கி ஐந்திணை நெறிய ளாவி
சவியுறத் தெளிந்து தண்ணென் றொழுக்கமுந் தழுவிச் சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா விரியினை வீரர் கண்டார். (36)

பூமிக்கு ஓர் அலங்காரமாய் மலைகளினின்று அடித்துக்கொண்டு வருகின்ற முத்து முதலிய சிறந்த பொருள்களைக் கொடுத்து, வயல்களுடைய வளச்செழுமைக்கு உதவுவதாய், வெப்பந் தணியத்தக்க இடத்தையுடைய நீராடு துறைகளையுடையதாய், ஐவகை நிலங்களின் வழியைத் தழுவி அழகுபெறத் தெளிந்து, குளிர்ந்த நீர்ப்பெருக்கை இடையறாமலுடையதாய்ச் செல்லும் கோதாவிரி நதி, பலவகை அலங்காரங்களையு முடையதாய், அறம்பொருள் இன்பம் வீடு என்னும் உறுதிப்பொருள்களைக் கொடுத்து, தன்னைக் கற்போர்க்கு நுண்ணறிவினை விளைப்பதாய் அகப்பொருட்டுறைகளைக் கூறுவதாய், ஐவகை நிலங்கட்குமுரிய முதற்பொருள், உரிப்பொருள், கருப்பொருள் ஆகியவற்றை

உரைப்பதாய் விளங்க வைத்தலென்னும் அழகுக்கு இடமாய மெல்லென்ற ஓசையோடு தட்டறச் செல்லும் சிறந்த நடையுடையதாய் உள்ள சான்றோர் செய்யுளை ஒத்திருந்தது எனவும்,

வண்டுறை கமலச் செவ்வி வாண்முகம் பொலிய வாசம்
உண்டுறை குவளை யொண்கண் ஒருங்குற நோக்கி யூழின்
தெண்டிரைக் கரத்தின் வாரித் திருமலர் தூவிச் செல்வர்
கண்டடி பணிவ தென்னப் பொலிந்தது கடவுள் யாறு. (37)

தெய்வத் தன்மைபொருந்திய யாறு, இராமனுதியோரைக் கண்டவுடன் அவர்கள் பாதங்களில் மலர்களைத் தூவி வணங்குவதை ஒத்திருந்தது எனவும்,

எழுவுறு காதலாலிங் கிரைத்திரைத் தேங்கி யேங்கிப்
பழுவநாட் குவளைச் செவ்விக் கண்பனி பரந்து சோர
வழுவிலா வாய்மை மைந்தர் வனத்துறை வருதல் நோக்கி
அழுவது மொத்த தாலவ் வலங்கு நீராறு மன்னோ. (38)

இராமனுதியோர் காட்டில் தங்க நேர்ந்ததையெண்ணி அவ்யாறு அழுவதையும் ஒத்திருந்தது எனவும் கூறுதல் காண்க.

மல்கலில் பெருங்கொடை மருவி மண்ணுளோர்
உள்கிய பொருளெலா முதவி யற்றபோ
தெள்கலி ிரவலர்க் கீதலின்மை யால்
வெள்கிய மாந்தரின் வெளுத்தது மேகமே. (39)

இச்செய்யுளில், மாரிகாலம் நீங்கிய பின், வெண்ணிறமடைந்த மேகம், நிறைந்த செல்வமுள்ள காலத்து வரையாது கொடுத்து, அச்செல்வம் அற்ற காலத்து வந்த இரவலர்க்குக் கொடுப்பதற்கின்மையின், வெள்கிய மாந்தரை ஒத்திருந்தது எனக் கூறுகின்றார்.

இனி, ஓரிடத்துக் கூறிய உவமையை பின்னோரிடத்து விளக்கிக் காட்டும் நயம் மிக்க இன்பந்தருவதாயிருக்கும். உதாரணமாக,

இப்பொழு தெம்மனோரா லியம்புதற் கெளிதே யாரும்
செப்பருங் குணத்தி ராமன் திருமுகச் செவ்வி நோக்கின்
ஒப்பதே முன்பு பின்பு அவ்வாசக முணரக் கேட்ட
அப்பொழு தலர்ந்த செந்தா மரையினை வென்ற தம்மா (40)

இக்கவியில், கைகேயி இராமனை நோக்கி, பரதன் கோமுடி தரித்து அரசாளவேண்டும், நீ காட்டிற்குச் சென்று பதினன்கு யாண்டுகள் கழித்து மீண்டு வரல்வேண்டும் எனக் கூறிய பொழுதிருந்த அவனது முகப்பொலிவை விளக்கிக் காட்டவந்த கம்பர், இராமனது திருமுகச் செவ்வி முன்பும் பின்பும் அலர்ந்த செந்தாமரையினை ஒத்திருந்தது, அவ்வாசக முணரக் கேட்ட அப்பொழுது அலர்ந்த செந்தாமரையினை வென்றது எனக் கூறியுள்ளார். இங்கு 'முன்பு' என்றது, "அரசுரிமையை ஏற்றுக்கொள் எனக் கூறியபொழுது" எனவும், 'பின்பு' என்றது, "நீ காட்டிற்குச் சென்று 14 யாண்டுகள் கழித்து மீளல்வேண்டும் என்று கூறியபொழுது" எனவும், அவ்வாசக முணரக்கேட்ட 'அப்பொழுது' என்றது 'பரதன் கோமுடிசூடி அரசாளவேண்டும் எனக் கூறியபொழுது' எனவும், 'அலர்ந்த செந்தாமரை' யென்றது, 'சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை' எனவும் பொருள் கொள்ளக் கிடக்கின்றன என்பது, பின்

மெய்த்தி ருப்பதம் மேவென்ற போதினும்
இத்தி ருத்துறந் தேகென்ற போதினும்
சித்தி ரத்தி னலர்ந்தசெந் தாமரை
ஒத்தி ருந்த முகத்தினை உன்னுவாள் எனவும்,

தெம்ம டங்கிய சேணிலங் கேகயன்
தம்ம டந்தையுன் தம்பிய தாமென
மும்ம டங்கு பொலிந்த முகத்தின
வெம்ம டங்கலை யுன்னி வெதும்புவாள் எனவும்,

கூறியுள்ள செய்யுட்களால் நன்கு விளங்குதல் காண்க.

இனி, இடத்திற்கேற்றவாறு கூறுகின்ற உவமை நயங்களைப் பலவிடங்களிற் காணலாம். உதாரணமாக,

தோள்கண்டார் தோளே கண்டார் தொடுகழற் கமல மன்ன
தாள்கண்டார் தாளே கண்டார் தடக்கைகண் டாரு மஃதே
வாள்கொண்ட கண்ணார் யாரே வடிவினை முடியக் கண்டார்
ஊழ்கொண்ட சமயத் தன்னான் உருவுகண் டாரை யொத்தார் 41

இச்செய்யுளில், வீதியில் உலாவருகின்ற இராமரைக் கண்ட பெண்கள் அவருடைய தோள், தாள், கை முதலிய உறுப்புக் களில், ஒவ்வொன்றைக் கண்டவர், அதையே பார்த்துக்கொண் டிருந்ததால், மற்றைய அவயவங்களைக் காணப்பெறுமையின், திருமால், திரிவிக்கிரமாவதாரமெடுத்த காலத்து அவரது அவயவங்களைக் கண்டவர்களை ஒத்திருந்தனர் எனக்கூறுகின்றார்.

இஃதென் சொல்லியவாறோவெனின், அண்டத்தில் அடிப் பாகத்தில் தாளும், முடிப்பாகத்தில் தலையுமாகவிருக்கும் ஒரு வடிவுடன் நிற்கும் பொழுது, பாதலம் முதலிய ஒவ்வோ ருலகத்திலுள்ளவர்கள் தங்களுக்கு நேரே காணப்படுகின்ற ஒவ்வோருறுப்பைமாத்திரம் காணக்கூடுமே யன்றி மற்றைய வுறுப்புக்களைக்காண முடியாதாகலின், அவ்வாறு கண்டவர்களை இங்கு, அத்திருமாலின் அவதாரமாகிய இராமருடைய திரு மேனியிலுள்ள ஒவ்வோருறுப்பைக் கண்டு, அதன் அதன் அழகில் ஈடுபட்டவர்களாய், அதை அதையே பார்த்துக் கொண்டிருந்ததால் மற்றைய அவயவங்களைக் காணப்பெறாத பெண்களுக்கு உவமையாக்குகின்றார்.

திரண்ட தோளின னிப்படிச் செப்பலும் சிந்தை
புரண்டு மீதிடப் பொங்கிய வுவகைய ராங்கே
வெருண்டு மன்னவன் பிரிவெனும் விம்முறு நிலைபால்
இரண்டு கன்றினுக் கிரங்குமோ ராவென விருந்தார். (42)

இச்செய்யுளில், தயரதன், அமைச்சர்களை நோக்கி அரசுரிமையை இராமனிடத்தில் ஒப்புவித்துவிட்டு, யான் மறுமைப்பயனை நாடிக் காட்டிற்குச்சென்று தவஞ்செய்ய விரும்புகின்றேன், இதில் உங்கள் கருத்து யாது என, இராமர் சக்கரவர்த்தியாக வரப் போகின்றாரென்பதைக் கேட்டதனாலுண்டான அளவு கடந்த மகிழ்ச்சியாலும், தயரதர் காட்டிற்குச் செல்லப் போகின்றாரென் பதைக் கேட்டதனாலுண்டான எல்லையற்ற துக்கத்தாலும் கவரப்பட்டிருந்த மந்திரிகள், 'இரண்டு கன்றினுக்கு இரங்கும் ஓர் ஆவென இருந்தார்,' எனக்கூறும் நயம்மிக்க இன்பந்தருவ தொன்றாகும்.

நவ்வி வீழ்ந்தென நாடக மயில்துயின் றென்னக்
கவ்வை கூர்தரச் சனகியாங் கடிகமழ் கமலத்
தவ்வை நீங்குமென் றயோத்திவந் தடைந்த வம்மடந்தை
தவ்வை யாமெனக் கிடந்தனள் கைகயன் தனயை (43)

இக்கவியில், கூனியால் தூண்டப்பெற்ற கைகேயி தயரதனிடத்தில், தான் விரும்பியவற்றைப் பெறும்பொருட்டு, கூந்தலை அவிழ்த்துவிட்டுக்கொண்டு, பூண்களைக் களைந்தெறிந்துவிட்டு, அலங்கோலமாகக் கிடக்கின்ற நிலையில், அவள், இலக்குமியாகிய சீதை அயோத்தியைவிட்டு நீங்கப் போகின்றாளாகலின், அவ்விடத்தை நமக்கு உரிமையுடையதாகச் செய்துகொள்ளவேண்டுமென்றெண்ணி அயோத்தி வந்தடைந்த அவ்விலக்குமியின் தமக்கையைப் போன்றிருந்தாள் எனக் கூறுகின்றார்.

தேடரு நலத்தபுன லாசைதெற லுற்றார்
மாடொர்தட முற்றதனை யெய்தும்வகை காணார்
ஈடழிவுறத் தளர்வொ டேமுறுவ ரன்றே
ஆட்க வளைக்குயிலு மந்நிலைய ளானாள். (44)

இக்கவியில், வீதிவழியே சென்றுகொண்டிருந்த இராமரைக் கன்னிமாடத்தினின்று கண்டு காதலித்து, இவரையே நாயகனாகப்பெறும் பேறுகிட்டுமோவென்று, அதுவே நினைவாகவிருந்த சீதை கலியாணமண்டபத்திற்கு வந்து இராமரைக் கண்டபொழுது இருந்த அவளது நிலைமைக்கு நீர் வேட்கையான் செலுத்தப்பட்டவர் ஓர்நன்னீர்த்தடாகத்தைக்கண்டு, அதிலிறங்கித்தண்ணீர் பருக வழிகாணாது தளர்வுறுகின்ற நிலையை ஒப்பிட்டுக் கூறுகின்ற நயம், கருதி இன்புறத் தக்கதாம். இவ்வாறே,

பருந்தடர் சுரத்திடைப் பருகு நீர்நசை
வருந்தருந் துயரினான் மாள லுற்றமான்
இருந்தடங் கண்டதி னெய்துறா வகைப்
பெருந்தடை யுற்றெனப் பேதுற் றாளரோ (45)

என மீட்சிப் படலத்துங் கூறுதல் காண்க.

(தொடரும்.)

எனது ஆராய்ச்சியிற் கண்ட சில செய்திகள்

திரு. T. V. சதாசிவப்பண்டாரத்தாரவர்கள்,
தமிழ்ப்பண்டிதர், கும்பகோணம்.

1 பண்டைக்காலத்தில் திருவிழாக்கள் எத்தனை நாட்கள் நடைபெற்றன என்பது. தற்காலத்தில் நம் தமிழகத்திலுள்ள திருக்கோயில்களில் திங்கள்தோறும் திருவிழாக்கள் நடைபெறுவதை யாவரும் அறிவர். இவற்றுட்சில, மார்கழித்திருவாதிரை, தைப்பூசம், மாசிமகம், பங்குனி உத்தரம் என்று வழங்கப்படுகின்றன. இவ்விழாக்களில் ஒவ்வொன்றும் இக்காலத்தில் பத்து நாட்கள் முடிய நடைபெறுகின்றது. தமிழ் வேந்தர்களாகிய சேர சோழ பாண்டியர் ஆட்சிபுரிந்த நாட்களில் இவ்விழாக்கள் பத்து நாட்கள் நடைபெறவில்லை என்பது சில கல்வெட்டுக்களால் புலப்படுகின்றது. ஆனால் அக்காலத்தில் இவை எத்தனை நாட்கள் நடைபெற்றன என்பதை புணர்த்தக் கூடிய மூன்று கல்வெட்டுக்களை அடியிற் குறிக்கின்றேன்.

* I (1) ஸ்வஸ்தி ஸ்ரீகோப்பரகேசரி வன்மற்கு யாண்டு கச-ஆவது இவ்வாண்டு (2) குன்றியூர் நாட்டு தேவதானம் திருநிலக்குன்றத்துத் திரு (3) மேற்றளிப் பெருமானடிகளுக்கு மாசிமகந்திருவிழா வொடுக்கிய (4) ன்று ஏழுநாளும் பதினைவர் மாகேஸ்வரர் பெறுபடி உண்ணப் (5) பரம்பையூர் சடையனன்பியைச் சார்த்திச் சடையன் கலைச்சி (6) வைத்த துளைப்பொன் ஐங்கழஞ்சின் பலிசையால் உண்ணவைத்தது-இது மாகேஸ்வர ரக்ஷை—2 [புதுக்கோட்டை நாட்டிலுள்ள குளத்தூர் தாலூகா குடுமியான் மலைக் கல்வெட்டு.]

† II (1) ஸ்வஸ்தி ஸ்ரீகோப்பரகேசரி வன்மற்கு யாண்டு உ௦ உ திருநிலக் குன்றத்துப் பெருமானடிகளுக்குப் பங்குனி

* † ‡ (Page 549) Inscriptions of the Pudukkottai State No. 57, 70 and 90.

உத்தரம் ஏழுநாளும் நிசதி இருபது பிராமணரூண்ண ஒரொருத் தற்கு (2)..............ஒரு பிடி தயிர் நாழி பாக்கொன்றுமாக செவெலூர் பட்டம் பட்டாரியான் பாண்டியதிபரசி வைத்த துளைப்பொன் ௰௫-ம் பன்மாகே..........(3) ஒரொருத்........தற்கு நாடுரியரிசி தயிர் மூழக்கு கறி ஒன்று வேள்கோவுக்கு நாடுரி அடுவர்க்கு முந்நாழி விறகுக்கு நாழி ஆக பொன் ௰௫-ம் முதல் ....[குடுமியான் மலைக் கல்வெட்டு.]

‡ III (1) திருமகள் போலப் பெருநிலச் செல்வியும்—தனக்கே யுரிமை பூண்டமை மனக்கொளக்—காந்தளூர்ச் சாலைக் களமறுத்தருளி—வேங்கை நாடுங் கங்க பாடியும்—நுளம்ப பாடியும் தடிகை வழியும்—குடமலை நாடுங் கொல்லமுங் கலிங்கமும்—எண்டிசை புகழ்தர ஈழ மண்டலமும்—இரட்டபாடி ஏழரை இலக்கமும்—திண்டிறல்வென்றி தண்டாற்கொண்ட—தன்னெழில் வளர ஊழியுள் எல்லா யாண்டும் தொழுதகை விளங்கும் யாண்டேய் செழியரைத் தேசுகொள் ஸ்ரீகோவிராஜ ராஜகேசரிவன்மராகிய ஸ்ரீராஜராஜதேவற்கு யாண்டு உ௰அ ஆவது கேரளாந்தக வளநாட்டு உறத்தூர்க் கூற்றத்து பிரமதேயம் விக்கிரமகேசரி சதுர்வேதிமங் கலத்துப்பால் திருவிறையான்குடி மகாதேவற்கு..............................சேனாபதி உத்தம சோழ நல்லூருடையான்பாளூர் அம்பலத்தாடியான முடிகொண்ட சோழ விழுப்பரையன் தாயார் பாசூர் நங்கையார் பேரால் பாசூர் நங்கை நல்லூர் என்னும் பெயராலும் இவ்வூர் ஏரி அத்தாணிப்பேரேறி என்றும் பெயராய் இப்பாசூர் நங்கை நல்லூர் நாங்கள் இறையிலியாக விற்றுக் கொடுத்தோம். இவ்வூர் நிலம் முன் இத்தேவற்குவேண்டும் நிவந்தங்களுக்கு செய்கின்றமையில் சித்திரைத் திருநாள் திருவாதிரைத் திருநாள் ஏழுநாளும் திருஉத்ஸவம் எழுந்தருளி தீர்த்தமாடியருளவேண்டும் அழிவுகளுக்கும் இத்தேவற்கு முன் திருப்பதியம் விண்ணப்பஞ் செய்யும் அடிகள் மார்க்கு நிவந்தம் மிலாமையால் இத்திருப்பதியம் விண்ணப்பஞ் செய்வார் ஒருவர்க்கு நிசதம் நெல்லு பதக்காக நால்வர்க்கு நிசதம் இருதூணிக்ககப்பட முதல் ஓராட்டைக்கு காசு ௩ ஆக நால்வர்க்குக் காசு ௰உ நிவந்தமாக செய்

தோம்.............[குளத்தூர் தாலூகா திருவிளாங்குடியிலுள்ள கல்வெட்டு.]

மேலே குறித்துள்ள மூன்று கல் வெட்டுக்களும் மாசித் திங்களில் நடத்தப்பெறும் மக விழாவும் பங்குனித் திங்களில் நடத்தப்பெறும் உத்தர விழாவும் சித்திரைத் திங்களில் நடத்தப் பெறும் சித்திரை விழாவும் மார்கழித் திங்களில் நடத்தப்பெறும் திருவாதிரை விழாவும் முற்காலத்தில் எவ்வேழு நாட்களே நடந்தன என்பதை நன்கு விளக்குகின்றன.

2 தெலுங்குமொழியில் முதலில் செய்யுளும் செய்யுள் நூலும் தோன்றியகாலம். குண்டூர் ஜில்லா ஒங்கோல் தாலுகாவிலுள்ள ஆதங்கி (Addanki) என்ற ஊரில் ஒரு வயலில் கிடக்கும் கல்லில் சில செய்திகள் பொறிக்கப் பெற்றுள்ளன. அதில் ஒரு தெலுங்குச் செய்யுளும் உளது. அக்கல்வெட்டு கி. பி. 844 முதல் கி. பி. 888 முடிய ஆட்சிபுரிந்த கீழைச்சளுக்கிய மன்னனாகிய மூன்றாங் கனகவிசயாதித்தனது ஆளுகையின் முதலாம் ஆண்டாகிய கி.பி. 845ல் பாண்டரங்கன் என்பான் அவ்வேந்தன்பால் படைத் தலைவனாக அமர்ந்தான் என்பதைத் தெரிவிக்கின்றது.* அக்கல்வெட்டிற் காணப்பெற்ற தெலுங்குச் செய்யுளுக்கு முன்னர் இயற்றப்பட்ட வேறு தெலுங்குச் செய்யுட்கள் இதுகாறும் கிடைத்தில. எனவே, தெலுங்குமொழியில் முதலில் செய்யுள் இயற்றப்பெற்ற காலம் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியாகும்.

தெலுங்கு நாட்டிலுள்ள வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் விசய வாடையில் (Bezwada) காணப்படும் யுத்த மல்லனது கல்வெட்டிலுள்ள தெலுங்குச் செய்யுட்களே எல்லாவற்றிற்கும் முந்தியனவாய் மிகப் பழமை வாய்ந்துள்ளன என்றும் அவை இயற்றப்பெற்ற காலம், கி. பி. பத்தாம் நூற்றாண்டாக விருத்தல்வேண்டும் என்றும் கருதி வந்தனர். பின்னர், மேற்குறித்த ஆதங்கிக் கல்வெட்டுக் கிடைக்கவே, அதிலுள்ள ஒருதெலுங்குச் செய்யுளைக்கண்டு அது கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் இயற்றப் பெற்றதாதல்வேண்டும் என்றும், தெலுங்குமொழியில் செய்யுள்

* Epiegraphia Indico Vol. XIX No. 47

இபற்றத் தொடங்கிய காலமும் அதுவே யாகும் என்றும் உணர்ந்து பெருமகிழ்ச்சியுற்றனர். ஆந்திரரது தாய்மொழிப் பற்று நம்மனோர் நன்குணர்ந்து பின் பற்றுதற்குரியதொன்று

முதலில் செய்யுள் தோன்றியகாலம் யாதென ஆராய்ந்து காண முடியாத அத்துணைத் தொன்மையும் பெருமையும் வாய்ந்த நம் தமிழ்மோழியைத் தாய்மோழியாகக் கோண்டுள்ள நம்மனோர், கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டிற்கு முன்னர் இயற்றப்பெற்ற செய்யுளே இல்லாத தேலுங்கு மோழியைத் தாய் மோழியாகக் கோண்டுள்ள ஆந்திரர்பாற் காணப்படும் தாய் மோழிப்பற்றைப் பார்த்தாயினும் தாய்மோழித் தோண்டில் ஈடுபட்டு உண்மைத் தோண்டாற்றுவார் களாக !

இனித் தெலுங்கு மொழியில் இயற்றப்பெற்ற முதல் செய்யுள் நூல் நன்னயப்பட்டர் எழுதியுள்ள மகாபாரதமாகும். இதற்கு முந்திய செய்யுள் நூற்கள் அம்மொழியில் இல்லை என்று அம்மொழியில் வல்ல அறிஞர்கள் கூறுகின்றனர். மகா பாரதத்தைத் தெலுங்கு மொழியில் செய்யுளாக எழுதிய நன் னயப்பட்டர் என்பார் கி.பி. 1022 முதல் கி.பி. 1063 வரையில் கோதாவரி கிருஷ்ணை என்ற இருபேராறுகளுக்கும் இடையி லுள்ள வேங்கை நாட்டில் ஆட்சி புரிந்துகொண்டிருந்த கீழைச் சளுக்கிய மன்னனாகிய முதல் இராசராசனது அவைக் களப் புலவராக விளங்கியவர். ஆகவே, இவ்வாசிரியர் வாழ்ந்தகாலம் கி.பி. பதினொன்றாம் நூற்றாண்டின் இடைப்பகுதியாகும். எனவே தேலுங்குமோழியில் செய்யுள் நூல் முதலில் தோன்றிய காலமும் கி. பி. பதினோன்றாம் நூற்றாண்டின் இடைப் பகுதியே யாகும் என்பது நன்கு வேளியாகின்றது. நம் தமிழ்மொழியிலுள்ள சிறந்த இலக்கியங்கள் எல்லாம் கி. பி. பதினொன்றாம் நூற்றாண் டிற்கு முன்னரே இயற்றப் பெற்றவை என்பது ஈண்டு யாவரும் அறிந்து கொள்ளுதற் குரியதொன்றாம்.

3. சேனாவரையர். தொல்காப்பியத்திற்கு இளம்பூரணர், கல்லாடர், தெய்வச்சிலையார், சேனாவரையர், நச்சினார்க்கினியர், பேராசிரியர் முதலானோர் உரை எழுதியுள்ளார். சேனாவரை

யாது உரை சொல்லதிகாரத்திற்கு மாத்திரம் உளது. சொல்லதிகார உரைகளுள் சேனாவரையரது உரையே திட்பநுட்பம் வாய்ந்து கற்போர்க்குக் கழி பேருவகை பயக்கும் பெருமை பெற்றதென்பர். இச்சேனாவரையரது வரலாறு சிறிதும் புலப்படவில்லை. ஆனால் பாண்டிநாட்டில் பழைய காலத்தில் 'சேனாவரையன்' என்ற பெயர் வழங்கியுள்ளது என்பது ஒரு கல்வெட்டால் அறியப்படுகின்றது. அது, *(1) ஸ்வஸ்தி ஸ்ரீகோமாறஞ்சடையர்க்கு (2) யாண்டு இரண்டு இதனெதிர் (3) மூன்று இவ்வாண்டு மிதுன நாய (4) ற்றுத் திருச்சி விந்திரத்து (5) எம்பெருமானுக்கு நியதம் (6) உழக்குநெய் முட்டாமல் (7) சந்திராதித்தவல் எரிவதாகத் (8) திருவழுதி வளநாட்டு திரு (9) வெள்ளூரில் சேனாவரையனாயின (10) தத்தன் அந்தரிவைத்த திருநொ (11) ந்தா விளக்கு ஒன்று இதற்கு விட்ட (12) சாவா மூவாப் பேரெருமை அஞ்சு (13) இவை மூலபரடை சபையார்க்குக்காட்டிக் கொடுத்தன'' என்பதாம். சில பெயர்கள் சில நாடுகளில் மாத்திரம் வழங்கி வருகின்றன. பிற நாடுகளில் அவை காணப்படவில்லை. எனவே, சேனாவரையன் என்ற பெயர் பாண்டி நாட்டில் மாத்திரம் வழங்கியுள்ளது என்று அறியப்படுகின்றமையின் அப்பெயருடன் விளங்கிய தொல்காப்பியச் சொல்லதிகார உரையாசிரியரும் பாண்டி நாட்டினராக விருத்தல் வேண்டும் என்பது உய்த்துணரப்படுகின்றது.

4 புடவை:—இந்நாளில் புடவை என்பது பெண்மக்கள் உடுத்தும் உடையை உணர்த்துகின்றது என்பது யாவரும் அறிந்ததொன்றே. ஆனால், முற்காலத்தில் ஆண்மக்கள் உடுத்திய உடையும் புடவை என்றே வழங்கி வந்ததென்பது பல கல்வெட்டுக்களால் புலப்படுகின்றது. இவ்வுண்மையை அடியில் வரையப்படும் உத்தம சோழனது செப்பேட்டின் ஒரு பகுதியால் உணர்ந்து கொள்க.

........' ஆராதிக்கும் (43) வேதபிராமணன் ஒருவனுக்கு நெல் பதக்கும் இவனுக்கு புடவை முதல் (44) ஓராட்டை நாளைக்குப் பொன் ஐங்கழஞ்சும் பரிசாரகஞ் செய்யும் மாணி ஒருவனுக்கு

* Travancore Archaeological Series Vol. III No. 27.

(45)நெல் அறுநாழியும், இவனுக்குப் புடவை முதல் ஓராட்டை நாளைக்குப் பொன் (46) கழஞ்சும் திருமெய் காப்பான் ஒருவனுக்கு நிசதம் நெல் குறுணியும் இவனு (47) க்கு புடவை முதல் ஓராட்டை நாளைக்குப் பொன்னிரு கழஞ்சும் நந்தவன உழைப் (48) பார் இருவர்க்கு நிசதம் நெல் குறுணி நானுழியும் இவர்களுக்குப் புடவைக்குப் பொன் கழஞ்சும்' ....

(South Indian Inscriptions Vol. III No. 128)

(தொடரும்)

கல்வி நிலே

திரு. இ. கோவிந்தசாமிப் பிள்ளேயவர்கள், தமிழாசிரியர்,
அரசர் கல்லூரி, திருவையாறு.

(முற்றொடர்ச்சி பக்கம் 521.)

காலமிடமறிந்து கல்வி கற்றவர்களே கடலிடைப்பட்ட இவ்வுலகில் இம்மை யின்பமு மறுமை யின்பமு மெய்துதற் குரியோராவர். இவர்களே காலமிடையிட்டவற்றையுந் தேய மிடையிட்ட வற்றையுங் காணும் அறிவுக் கண்ணுடையராவர். இம்மைக்கண் புகழ் பொருள் பூசையும், மறுமைக்கண் இன்பமும் பெறுவோராவர். எண் பொருளவாகச் செலச் சொல்லுந் திண்மையும், கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழியுந் திறமையும், அரசனும் விரும்பு மறிவாற்றலுடைமையும், என்று மொன்றிய நன்றுடை கன்ற லில் உள்ள முடைமையும் அடைந்தோராவர்.

கற்றவர்க்கு எல்லாநாடும், எல்லாவூரும் தம்முடையன வேயாம். அவ்வநாட்டவரும் அவ்வவ்வூரவரும் கற்றவர்க்காவன வற்றைச் செய்து களைகணுயிருப்பர், அதனுல் கற்றவர் இடையறு வின்பமெய்துவர்.

" யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு" எ-ம்,

" மன்னனு மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்—மன்னற்குத்
தன்றேச மல்லாற் சிறப்பில்லை கற்றோற்குச்
சென்றவிட மெல்லாஞ் சிறப்பு." எ-ம்,

" ஆற்றவுங் கற்றா ரறிவுடையா ரஃதுடையார்
நாற்றிசையுஞ் செல்லாத நாடில்லை யந்நாடு
வேற்றுநா டாகா தமவேயா மாயினால்
ஆற்றுணா வேண்டுவ தில்" எ-ம், குறளும், மூதுரையும்

பழமொழியும் பகர்கின்றன. ஆதலின் கற்றவர் முற்றவும் இன்பமெய்துவர் என்பதளவைகளானும் அறியக்கிடக்கின்றது. முன்னர், கல்வியுடைமை பொருளுடைமை யென வழக்கொடுபடுத்தோம். முன்னதாகிய கல்விக்குப் பொருளுடைமையும் வேண்டும். கல்விகற்றவர்க்குப் பொருள் இன்றியமையாததேயாம். பொருளுடையவன் கற்ற கல்வியே இக்காலத்திலும் மேம்பாடடைகின்றது.

" எனைத்துணைய வேனு மிலம்பாட்டார் கல்வி
தினைத்துணையுஞ் சீர்ப்பா டிலவாம்—மனைத்தக்காள்
மாண்பில ளாயின் மணமக னல்லறம்
பூண்ட புலப்படா போல்" என்பதுகொண்டுந்

துணிந்தறிய வேண்டிக்கிடக்கின்றது.

அற்றாயின் பொருளுடைமையே உயர்வானதென்றன்றோ முடியும் எனின்; அழிவுடையவுடலைக் கொண்டு அழியாதவுயிர் தனக்குற்ற தளையற்று வீடுறுவதுபோல, அழிவுறுபொருளால் அழிவறு கல்வி யறிவையடைய வேண்டியிருத்தலின் ஆகாதென்க.

அங்ஙனம் முயர்வுறு கல்வியறிவுற்றவர், " சொல்லுதல் யார்க்கு மெளிய அரியவாஞ், சொல்லியவண்ணஞ் செயல்" என எளியனகடைப் பிடிக்காது அரியனகடைப்பிடித் தீட்டுவாராகல் வேண்டும். தமது நுட்பவறிவிற்கேற்ப அறத்

தொடுபட்ட பற்பல தொழில்களைச் செய்து பொருளீட்டல் வேண்டும். படிப்புத் தொழிலே தொழில், அதுவே ஊதியம் அளிக்குமெனக் கோடலாகாது, கைத் தொழிலுஞ் செய்தல் வேண்டும்.

பண்டைக் காலத்துப் புலவர் செயல்களைப் பார்ப்போமாயினீது விளங்காதொழியுமோ? கூலவாணிகன் சாத்தனார், வெள்ளைக்குடி நாகனார், மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார், வள்ளுவர் முதலியவர்கள் எவ்வெத் தொழிலில் வல்லுநராயிருந்தனர். சங்ககாலத்துப் புலவர் பெருமக்களெல்லோருமே ஒவ்வொரு தொழில் செய்து வந்தவர்களாகவே காணப்படுகின்றனர்.

மக்கட் பிறப்புற்றவர்க்கு அறிவு இருவகைப்படும். இயற்கையறிவும் செயற்கையறிவுமென. பின்னர்த் தாகிய வறிவே கல்வியறிவாகும். இச் செயற்கையறிவு முதிருமாயின், அதுவே இயற்கையுமாகும். இயற்கைமாறிச் செயற்கைத் தாதல் ஒருநாளுமின்றாம், பழம்பிறப்பிற் கற்றகல்வியறிவாகிய செயற்கையறிவு எடுத்த பிறப்பில் இயற்கை யறிவாகவரும். "ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவர்க்—கெழுமையு மேமாப்புடைத்து." என்னுங் குறளுமிதற்குச் சான்றாகும். இப்பிறப்பிற் கற்ற கல்வியறிவு இனியெடுக்கும் பிறப்பிற்கு இயற்கையறிவாக வரும். ஆகவே, அறிவிற்குக் காரணம் கல்வி என்பது பெறப்பட்டது.

கல்வியைக் கற்றாலன்றி யறிவுவளரா தென்பதாயிற்று. "கலைமலிந்த வேனம்பி கண்ணப்பற் கடியேன்" என்பதி லுள்ள அடைமொழிகளும் இதனையே வற்புறுத்தும். இங்ஙனம் அறிவு வளர்ச்சியின் பொருட்டாகிய கல்விவலாருக்கும், கல்வியிலாருக்கு முள்ள ஏற்றதாழ்வுகளாவன இவையென ஒரு சிறிதாய்குதும்.

கற்றார் மக்களாகின்றனர், கல்லாதார் மக்களாய்ப் பிறந்து வைத்தும் விலங்காகின்றனர்.

" ஞானமிகவளரி னஃறிணைய வுயர்திணையாகு நவிலஞ்ஞான
வீன மிகவள ரினுயர்திணைய வஃறிணையாகுமென்றுதேற்றன்
மான வஃறிணைமேலு மாண்டவுயர்திணை கீழும்வடிவிற்காட்டித்
தேனமரும் பொழிற்றில்லைச் சிகரிவாழ்கற்பகத்தை வணக்கஞ்
[செய்வாம்".

என்னுஞ் சிதம்பரசபா நாதபுராணக் காப்புச் செய்யுளையுமுற்று நோக்கினினிது புலப்படும். கற்றவர் கண்ணுடையர். கல்லாதார் கண்ணுடை யாராயினும் அவர் கண்ணுற் காணுங்காட்சியறிவு விலங்குணர்ச்சியை நிகர்த்து நிற்றலின், கண்ணிலாதாரேயாவர். கற்ருர் நுட்பமின்மையைக் கழறினும், மற்ருர் அதனை நுட்பமாக் கொள்வர். கல்லாதார் மிகவுநுட்ப முண்மையைக் கழறினும் நுட்பமின்மையாகவே கருதுவர் உலகினர். எரல் எழுத்துப் போல்வதோர் விழுக்காடிஃதாமென விகழ்ந்துந் தள்ளுவர். கல்லாதான் அவைக்கண் இருத்தல் நாயிருந்தற் றெனவும், கல்லாதான் சொற்காமுறுதல் பெண்ணலமில்லா தாள் பெண் காமுற்றற்று எனவும் இழித்துக் கூறுகின்றனர்.

அங்ஙனமாயின் இப்பெற்றியுற்ற விழிதகைமையைப் போக்க வல்ல தியாதெனின் கல்வியே யாம். அக்கல்வியை உடையான் முன் இல்லார்போல் ஆசையாற்ருழ்ந்துங் கற்ருல் போக்கல் கூடும். கற்ருர் நல்வினையுடையரே, கல்லார் தீவினையுடையரே. திருக்குற்ருலத் தலபுராணத்தொரு செய்யுளை நோக்குமிடத்துமிதனை யுணரலாம். அது வருமாறு :—

" இருவிழிகள் வாண் முகத்திலிருந்தாலும் வானிரவி யெழுந்தாலன்றிக், கருது நிலப்பல் பொருளுங் காண்டலரிதா முலகிற் கண்போலியாரும், பெருகிய செல்வமு மறிவும் பெற்ருலும் நூற் கேள்வி பெறுவார்க்கன்றித்— திருவளர் புண்ணிய பாவமிம்மை மறுமையும் வீடுந்தெரியா வன்றே" என்பதாம்.

இத்தன்மைத்தாக உளம் ஒப்பக் கல்வி கற்றவர் கற்ற நெறியே யொழுகல்வேண்டும். அங்ஙனங் கற்றவரே கல்வியாலாய பயனையு மடைவோராவர். இவர்களுடைய வாயிற் சொற்களே அறவுரைகளாம். இச்சொற்களையே யெவருங்

கேட்பர். இவர் தம் புகழ்தான் உலகிடையிலவும். கற்றவர் கற்றவழியொழுகாராயின் அவர்களினும் பேதையரில்லை. "ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தானடங்காப், பேதையிற் பேதையாரில்" என்பது வள்ளுவர் வாய்ச்சொல். இங்ஙன மொழுகாமையான் உலகத்திடை யேனைமக்களுங் கெடுகின்றனர். அவர் கெடுதற்குப் பொருட்டிவர்களே யாவர்.

இனிக் கல்வி கற்கும்போதும் கற்று முடிந்த பின்னரும் செருக்குவருவது ஒரு தலையாம். அச்செருக்கினைபுறவே முருக்கல்வேண்டும். கல்வியாகிய பைங்கூழுக்குப் பைஞ்சாயாகிய களையுமதுவே யாகலான்; செருக்குற்ற ஞான்று கல்வியழிதலைத் திருவிளையாடற் புராணத்தில் பரஞ்சோதி முனிவர்,

"மருட்சிசெய் காமநோயான் மதிகெடுமாறு போல
வருட்சிவ ஞானநோக்கான் வலிகெடு மாறுபோலத்
தருக்குறு முவணஞ் சிறத்தழலிரா விளியுமாபோற்
செருக்குறவழியுங் கற்ற கல்விபோற் சிதையுமன்றே"

என எவ்வளவு வனப்புடைத்தாகக் கூறுகின்றனர்.

இக்காலத்திலோ, உரைநடை நூல்களும், பற்பல வகையான சிற்றிலுரை நடை நூல்களும் மலிய, அவைகளைச் சில நூல் திரட்டுக் கழகத்தார் ஒப்பங்கொடுக்க, அவைகளையே பாடங்களாக வைத்து, அகர முதலாகக் கற்பித்தலொழிய டகர முதலாகக் கற்பிக்கப்பட்டு வருகின்றது.

அவைகளைத் திருத்தவும் முடியாது, திருத்த முயலவுங் கூடாதென நினைக்கின்றேன். அரசியல், தமிழரசியலாய், தமிழ்ப்பெரும் புலவர்களை யாதரிக்கு முலகமாய் வருநாளு முண்டு. அக்காலையிவைகள், 'வெண்கல நடமாடின் குபவன் குடியோடிப்போவன்' என்ற மூதுரையின்படி, குடிகொள்ளக் காட்டிடையேகும். செப்பமுந் திருத்தமும் ஏற்படும்.

இதுகாறுங் கற்றல் பற்றியும் நூல் பற்றியும், அறிவு பற்றியும் சிறிது சிறிதாராய்ந்து விரித்தாம். இனி, நிற்றல் பற்றிச் சிறிது விரிப்பாம், வள்ளுவர், நிற்றல், இல்லறவழி

நிற்றலும், துறவின்வழி நிற்றலுமென இருவகையாக வகுத்தனர்.

" கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக" என்னுங் குறளின் (விசேட)
சிறப்புரையில் ஆசிரியர் பரிமேலழகர் நிற்றலாவது 'இல்வாழ்வுழிக் கருமமுள்படாப் போகமுந் துவ்வாத் தருமமுந் தக்கார்க்கே செய்தலினும், துறந்துழித்தவத்தான் மெய்புணர்ந்து அவா வறுத்தலினும் வழுவாமை' எனவுரைத்துளார். ஆகவின் இங்ஙனம் வழுவாமை நிற்றலே நிற்றலாம். இங்ஙனங் கற்றுணர்ந்து அறிவு கைவரப் பெற்றான்,

" மக்களொடு மகிழ்ந்து மனையறங்காத்து
மிக்க காமத்து வேட்கை தீர்ந்துழி
தலைவனுந் தலைவியுந் தம்பதி நீங்கித்
தொலைவில் சுற்றமொடு துறவறங் காப்ப " என

அகப்பொருள் விளக்கவுரையா லறியக் கிடத்தலின் இங்ஙனமொழுகி நிற்றல் வேண்டும் என்பதும் விதியாயிற்று. கல்வியும் இங்ஙன நிற்றற் பொருட்டன்றோ கற்கப்படுவது.

ஓதாதுணர்ந்த நங்குமர குருபரவடிகளாரும் தமது சிதம்பர மும்மணிக்கோவையில் இவ்விரு நிலையின் பெற்றியை யெடுத்துரைத்திருப்பதும் இங்குக் குறிக்கத்தக்கது. அது வருமாறு :-

" சிற்சபை பொலியத் திருநடம் புரியும்
அற்புதக் கூத்தநின் னமுதுவாக் களித்த
நல்லற நூல்களிற் சொல்லறம் பலசில
இல்லறந் துறவற மெனச் சிறந்தனவே
அந்நிலை யிரண்டனுண் முன்னது கிளப்பிற்
கற்றநூற் றுறைபோய்க் கடிமனைக் கிழவன்
நற்குண நிறைந்த கற்புடை மனைவியோடு
அன்பு மருளுந் தாங்கி யின்சொலின்
விருந்து புறந்தந் தருந்தவர்ப் பேணி
ஐவகை வேள்வியு மாற்றி யில்வகை
நல்லற நிரப்பிப் பல்புகழ் நிறீஇப்

பிறன்மனை நயவான் றன்மனை வாழ்க்கைக்கு
வரையா நாளின் மகப்பேறு குறித்துப்
பெருநலந் துய்க்கும் பெற்றித் தன்றே
மற்றையது கிளப்பின் மனையற நிரப்பி
முற்றுணர் கேள்வியின் முதுக்குறை வெய்திப்
பொருளு மின்பமு மொரீஇ யருளொடு
பொறையு மாற்றலு நிறைபே ரொழுக்கமும்
வாய்மையுந் தவமுந் தூய்மையுந் தழீஇ
ஓரறி வுயிர்க்கு முறுதுய ரோம்பிக்
காலோய் நடைய னாகித் தோலுடுத்து
என்பெழு மியாக்கையன் றுன்புறத் துளங்காது
வரையுங் கானு மெய்திச் சருகொடு
கானீ ரருந்திக் கடும்பனிக் காலத்து
மாநீ ரமூவத் தழுங்கி வேனிலின்
ஐவகை யழலின் மெய்வருந்த வருந்தி
இவ்வகை யொழுகு மியல்பிற் றன்றே'' என்பதாம்.

தற்காலத்தில் இன்னிலையினிற்போர் துறவுநிலை நிற்போர் போன்றும் துறவினில் நிற்போர் இன்னிலையி னிற்போர் போன்றுங் காணப்படுகின்றனர் மாறுபட்டச் செயலினராய்; இங்ஙனஞ் சுருங்க நிலையினையெடுத்துக் கூறலன்றி வேறெங் ஙனங் கூறல் வனப்பாம்? ' அந்தணர்நூற்கு மறத்திற்குமாதியா நின்றது மன்னவன் கோல்' என்பது குறளாகும்.

இவ்விரு நிலையு நின்று நிலைப்பதானல் தமிழரசியல்தான் வேண்டப்படும்.

" மாதவர் நோன்பு மடவார் கற்புங்
காவலன் காவ லின்றெனி னின்றால்'' என்பது

மணிமேகலையாம். பிற்காலத்தாசிரியர் ஒருவர் துறவற நிலையில் நிற்றலைப்பற்றி யுரைப்பதையும் ஈண்டு வரையவேண்டி யிருக்கின்றது. அச்செய்யுள் வருமாறு :—

" வர்க்கத்தார் தமைவெறுத்த விருத்தருமாய் மெய்ஞ்ஞான
[வடிவமானோர்

கற்கட்டாகிபூ மடமுங் காணியுஞ் செம்பொனுந் தேடுங்
[கருமமெல்லாம்
பொற்கொத்தாஞ் செந்நெல் வயற்றண்டலை நீணெறியாரே
[பொன்னுடாகுஞ்
சொர்க்கத்தே போம்போதுங் கக்கத்தே ராட்டினத்தைச்
[சுமந்தவாறே" என்பதாம்

"வேட நெறிநில்லார் வேடம் பூண்டென்பயன்" எனவும்,

"வலியி னிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்றோல் போர்த்துமேய்ந் தற்று" எனவும் வருஞ்
செய்யுட்களையும் நோக்க வேண்டியதாகின்றது.

இக்காலத்திற் சிலர் பண்டைச் வினையாற் கல்வி கைவரப் பெற்றவராகக் காணப்படுகின்றனர். அன்னவர் பொருளுடைமையில் இவறன்மை பூண்டொழுகும் பேய்போல இவறன்மை கொண்டு நூல்களை நன்றாகக் கற்பிக்கின்றார்களில்லை. செல்வத்தைப்போலவா இக்கல்வி குறையுறும். அங்ஙனங் குறையாதென்பதை மறந்தார் கொல்லோ? அடுத்த பிறப்பிற் காமெனுங் கருத்தாற் சேமித்து வைத்திருக்கின்றனர் கொல்லோ? இனியக்கல்விப் பொருள் கைகூடப்பெறுதென நினைப்பர் கொல்லோ? அறியேம் அறியேம். அழியுந்தன்மைத்தாஞ் செல்வத்தைப் பிச்சரிற் கொடுக்கவில்லையா வள்ளலாவார்கள்? அங்ஙனமாகவும் அழியாத் தன்மைத்தாய கல்வியுடையானொருவன் எற்றிற்கு வைத்திருத்தல்வேண்டும்.

"கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினும்
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான்—மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோன் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யு முடம்பு" எனக்கூறுஞ் செய்யுளால்.
கல்வியே நிலைமையினையுடைத்து ஏனையுலகியற் பொருள் நிலையின்மையினை யுடைத்தென்பது புலப்படவில்லையா?

ஐயன்மீர்! இதுகாறுங் கல்விநிலை யெனுந் தொடர்க்குக் கொண்ட பொருளுக்கேற்பப் பொருள் விரித்துஞ் சுருக்கியுங் கூறினும். இதனுட்குணங்களுளவேல் அவைகொண்டு மற்றதை

வகற்றிப் பொறுப்பிராக. புறநானூற்றில், கல்வியின் சிறப்பினைக் கூறுஞ்செய்யுளைமட்டுங் கூறிக் கட்டுரையினை யொருவாறு முற்றுவிக்குதும்.

“ உற்றுழி யுதவியு முறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்ற னன்றே
பிறப்போ ரன்ன வுடன்வயிற் றுள்ளுஞ்
சிறப்பின் பாலாற் றாயு மனந்திரியும்
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக வென்னா தவருள்
அறிவுடை யோனா றரசுஞ் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளுங்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனும் அவன்கட் படுமே ” என்பதாம்.

“ தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று ” என்னுங் குறளை

யுஞ் சிந்தித்துப் புகழ் முதலிய பெற்று வாழ்வோமாக.

“ உலகெ லாமுணர்ந் தோதற் கரியவ
னிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

பிழை—திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
554	14, 15	உடமை	உடைமை
,,	28	முயர்வுறு	உயர்வுறு
555	22	இபற்கை	இயற்கை
557	27	குடிகொள்ளக்	பழமை குடிகொள்ளக்
560	32	மற்றதை	மற்றைய

பின்னங்குடிச் சுப்பிரமணியசாத்திரியார் தொல்காப்பியச் சொல்லதிகார வாராய்ச்சிக் குறிப்புரையும் மறுப்பும்

திரு. ம. நா. சோமசுந்தரம் பிள்ளையவர்கள்,
தமிழ்ப்புலவர், மன்னார்குடி.

(முற்றொடர்ச்சி 528.)

தெய்வச்சிலையார் :— 'என்மனார் என என்ப என்னும் முற்றுச்சொல் திரிந்து நின்றது.'

'குறைக்கும் வழிக் குறைத்தல் என்பதனால் பகரம் குறைத்து, விரிக்கும் வழி விரித்தல் என்பதனால் மன்னும் ஆருமென இரண்டு இடைச்சொற் பெய்து, என்மனார் என்று ஆயிற்றெனப் பொருள் உரைப்பவால் எனின், பகரம் குறைக்கின்றது செய்யுளின்பம் வேண்டியன்றே? ஆண்டுக் குறைத்த வழிப் பின்னும் இரண்டு எழுத்து விரிக்கல் வேண்டுமாயின், குறைத்ததனால் பயனின்மையின் இவ்வாறு எழுதும் உரை குற்றமென்க. எதிர்காலச்சொல்லாயினும் இறந்தகாலம்குறித்து நின்றது, இறப்பும் எதிர்வும் மயங்கப்பெறும் ஆகலின், என்பது.

சேனாவரை :—' என்மனார் என்பது செய்யுண்முடிபு எய்தி நின்றதோர் ஆரீற்று எதிர்கால முற்றுச்சொல். 'என்ப' என்னும் முற்றுச்சொல்லினது பகரம் குறைத்து மன்னும் ஆரும் என இரண்டு இடைச்சொற் பெய்து விரித்தார் என்று உரையாசிரியர் கூறினரால் எனின், என்மனார் என்பது இடர்ப்பட்டுழிச் சிறுபான்மைவாராது, நூலுள்ளும் சான்றோர் செய்யுளுள்ளும் பயின்று வருதலானும்........அவர்க்கது கருத்தன்று என்க' (எ-து).

சேனாவரையர் :—('இயற் சொற்றிரிசொல்' என்னும் சூத்திரவுரை.) 'என்மனார் என்பதனை வினைத்திரிசொல் என்பாரும் உளர். அஃது 'என்றிசினோர்,' 'பெறலருங்குரைத்து' என்பன

போலச் செய்யுண் முடிபு பெற்று நின்றது என்றலே பொருத்த முடைத்து' (எ-து).

நச்சினார்க்கினியர்:—'என்மனார் என்பது ஓர் ஆர் ஈற்று நிகழ் கால முற்றுவினைத் திரிசொல்' (எ-து.)

பேராசிரியர் :—(விட்டகல் வின்றி விரிவொடு பொருந்தி' என்னும் மரபியற் சூத்திரவுரை) 'உயர்திணையென்று சொல்லுப ஆசிரியர் மக்கட் சுட்டின் கண், அஃறிணையென்று சொல்லுப அவரல பிறவற்றுக்கண்' (எ-து).

இலக்கண விளக்க நூலார் :— 'உயர்திணையென்று கூறுவர் தொல்லாசிரியர் மக்கட் சுட்டினை அம்மக்கட் சுட்டு அல்லாத பிறபொருளை அஃறிணையென்று கூறுவர் தொல்லாசிரியர்.'

'என்மனார் என்றிசினோர் முதலிய வினைத்திரிசொற்கள்.' (எ-து.)

இலக்கண கொத்து நூலார் :—'மக்களைச் சொன்னார் உயர் திணையென்று.' (எ-து.)

மயிலைநாதர் :—என்மனார் என்பதற்கு என்று கூறுவர் என்று உரைவிரிப்பர்.

சங்கர நமச்சிவாயப் புலவர் :— 'என்மனார் என்புழி மன் இறந்தகால இடைநிலை.' (எ-து.)

சிவஞான முனிவர் :—'என்மனார் என்றது செய்யுண் முடி பாயதோர் ஆர் ஈற்று முற்றுச்சொல். மன் எதிர்கால இடை நிலை. அது 'உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே' என்னும் சூத்திரத்துச் சேனாவரையர் உரையாலும் உணர்க.' (எ-து) திராவிட மாபாடியம்.)

மேற்குறித்த உரையாசிரியருள்ளே, நக்கீரனார், இளம் பூரணர், பேராசிரியர், தெய்வச்சிலையார், கல்லாடனார், சேனாவரை யர், யாப்பருங்கல விருத்தியுரையாசிரியர் மயிலைநாதர் இலக்கணக் கொத்து நூலார், சிவஞானமுனிவர் என்னும் இவரெல்லாம் 'என்மனார்' என்பது எதிர்கால வினை முற்றாகவே கொண்டார்.

நச்சினார்க்கினியர் அது ஓர் ஆரீற்று நிகழ்கால வினைமுற்றென்று கொண்டார் என்று அவருரை தெரிவிக்கின்றது. இலக்கணக் கொத்து நூலாரும் சங்கர நமச்சிவாயப் புலவரும் அது இறந்தகால வினை முற்றென்று கொண்டார். இவற்றுள் நச்சினார்க்கினியர் கூற்றை முன்னர் எடுத்துக் கொண்டு ஆராய்வாம்.

'என்மனார்' என்னும் சொல்லானது சேனாவரையர் கூறியவாறு நூலுள்ளும் சான்றோர் செய்யுளுள்ளும் பயின்றுவந்த வழக்கினதேயாம். சொல்லதிகாரத்துள்ளே, மேலும்,

'இயற்பெயர்க் கிளவியும் சுட்டுப்பெயர்க் கிளவியும்
....
இயற்பெயர் வழிய என்மனார் புலவர்.' (சூ. 38)

'காப்பின் ஒப்பின்....................................
என்ன கிளவியும் அதன்பால என்மனார்' (சூ. 73)

'அதனினியறல் அதற்றகு கிளவி..............
அன்ன பிறவும் அதன்பால என்மனார்' (சூ. 75)

'அதற்கு வினையுடைமையின்................
அப்பொருட் கிளவியும் அதன்பால என்மனார்' (சூ. 77)

'வண்ணம் வடிவே......................................
அன்னபிறவும் அதன்பால என்மனார்' (சூ. 79)

'கண்கால் புறமகம்.......................
அன்னபிறவும் அதன்பால என்மனார்' (சூ. 83)

'சினைநிலைக் கிளவிக்கு ஐயும் கண்ணும்
வினைநிலை யொக்கும் என்மனார் புலவர்.' (சூ. 85)

'மூன்றனும் ஐந்தனும்................
நோக்கோ ரனைய என்மனார் புலவர்.' (சூ. 92)

'ஏனைஉயிரே உயர்திணை மருங்கின்
தாம்விளி கொள்ளா என்மனார் புலவர்.' (சூ. 126)

'வழக்கின் றென்மனார் வயங்கி யோரே.' (சூ. 141)

'பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்
சொல்லின் ஆகும் என்மனார் புலவர்.' (சூ. 158)

'எல்லாரும்.......அன்னவியல என்மனார் புலவர்.' (சூ. 166)
'இரீஈர் மின்னென....என்மனார் புலவர்.' (சூ. 226)
'செய்கென் கிளவி....என்மனார் புலவர்.' (சூ. 206)
'அம்முக் கிளவியும்...............
வினையோரனைய என்மனார் புலவர்.' (சூ. 233)
'அவ்விடன் அறிதல் என்மனார் புலவர்.' (சூ. 240)
'விரைந்தபொருள என்மனார் புலவர்.' (சூ. 243)
'தகுநிலையுடைய என்மனார் புலவர்.' (சூ. 275)
'எண்ணுக்குறித் தியலும் என்மனார் புலவர்.' (சூ. 288)
'ஓம்படை யாணையிற் கிளந்தவற்றியலான்
பாங்குற வுணர்தல் என்மனார் புலவர்.' (சூ. 396)
'நாட்டல் வலிய என்மனார் புலவர்.' (சூ. 403)
'தன்னிடத்தியலும் என்மனார் புலவர்.' (சூ. 448)

என் 'என்மனார்' என்னும் சொல்வழக்குப் பயின்று வந்தது. இவ்வாறே எழுத்ததிகாரத்துள்ளும் பொருளதிகாரத்துள்ளும் பயின்றுவந்ததும் காண்க.

மேற்கண்ட சூத்திரவுரைகளில் எல்லாம் நச்சினார்க்கினியர் 'என்மனார்' என்னும் சொல்லுக்கு 'என்று கூறுவர்' என்று பொருள் உரைத்து, அதனை ஆர் ஈற்று எதிர்கால வினைமுற்றாகவே குறிப்பித்தார். 'உயர்திணை யென்மனார்' என்புழியும் அவர் 'என்மனார்' என்பதற்கு 'என்று கூறுவர்' என்றே கண்ணழித்துரைத்தார். ஆதலால், அது ஓர் நிகழ்கால வினை முற்று என்பது அவர்க்குக் கருத்தன்று. ஆகவே அச்சூத்திர வுரையுள் அது ஓர் நிகழ்கால வினை முற்றென்று குறித்தது ஏடெழுதினோர் பிழையென்று ஒழிதலே சால்புடைத்தாம் என்க.

இனிச் சங்கர நமச்சிவாயப் புலவர், மேற்கண்ட நக்கீரனார் முதலிய பல்லுரையாசிரியர் கருத்தொடும் முரணி, அவ்வென் மனார் என்னும் சொல் இறந்தகால வினைமுற்று எனவும், மன் இறந்த கால விடைநிலையெனவும் கூறியதற்குக் காரணம், அவர்

உரையால் புலப்படவில்லை. இலக்கணக்கொத்து நூலார் குறிப்பிற்கும் காரணம் புலப்படவில்லை. மன் என்பதோர் இடைநிலை கொண்ட வினை முற்றுச்சொல் என்மனர் என்பதன்றி 'மொழி மனர்' என வருதலும் உண்டு. இதனை,

'மற்றென் கிளவி வினைமாற் றசைநிலை
அப்பால் இரண்டென 'மொழிமனர் புலவர்,'
'உயர்திணை மருங்கின் உம்மைத் தொகையே
பலர்சொல் நடைத்தென மொழிமனர் புலவர்' என்பனவற்றால் அறிக.

இவற்றையெல்லாம் இறந்தகால வினை முற்றென்று கோடற்கு இடன் ஒன்றும் இல்லை.

மக்கள் ஆகிய நன்கு மதிக்கப்படும் பொருளை உயர்திணையென்பதும், அவரல்லாத பிறவற்றை அஃறிணையென்பதும் முக்காலத்தினும் ஒத்தியல் பொருள் வழக்கேயன்றி இறந்த காலத்து வழக்கு மட்டும் அன்று. அங்ஙனம் முக்காலத்தினும் ஒத்தியலும் பொருளை எதிர்கால வினைச் சொல்லாற் கூறல் வேண்டும் என்பது ஆசிரியர் கருத்து. அதனை 'எழுத்தெனப் படுப........முப்பஃதென்ப' என்னும் முதற்சூத்திரவிருத்தியுள்ளே, சிவஞானமுனிவர் 'என்ப' என்றும் சொல்லுக்கு இலக்கணங் கூறியவாற்றான் அறிக. அவர் ஆண்டு உரை கூறியவாறு:—

'என்ப என்பது பகரவீற்றுப் பலரறிசொல்........மகரவீறு ஈற்றுவகையான் எதிர்காலம் காட்டி முதனிலையும் ஈறுமாகவே பகுக்கப்பட்டுவரும்..........அற்றேல் அஃதாக; எழுத்தெனப் படும் என்றால் முக்காலத்தினும் ஒத்தியல்வதாகலின்,

'முந்நிலைக் காலமும் தோன்றும் இயற்கை
எம்முறைச் சொல்லும் நிகழும் காலத்து
மெய்ந்நிலைப் பொதுச்சொற் கிளத்தல் வேண்டும்.' என்றும் சூத்திரவிதிபற்றி நிகழ்காலப் பொதுச் சொல்லாற் கூறவேண்டும்; அன்றித் தொல்லாசிரியர் குறியீடு என்னும் கருத்துவகையால் கூறினும், இறந்த காலத்தாற் கூற அமையும்; அவ்வாறன்றி, என்ப என எதிர்காலத்தாற் கிளந்தவாறு என்னையெனின்:—

நன்று கூறினாய்! 'முந்நிலைக் காலமும் தோன்றும் இயற்கை என்னும் சூத்திரம் வடமொழி மதம் பற்றிக் கூறினர். தந்துணிபு உரைத்தல் அன்று; இறப்பினும் நிகழ்வினும் உண்மை நிகழ்ச்சி யான் அறியக்கிடத்தலின் எதிர்காலத்தினும் உளதாதல் உணர்ந்தன்றி முக்காலத்தினும் நிலைபேறுடைமை கூடாமையின் அது பற்றி எதிர்காலச் சொல்லால் கிளத்தல் தமிழ் நடையேன்பது ஆசிரியர் துணிபு என்றற்கு, 'எழுத்தெனப் படுப அகர முதல் னகரவிறுவாய் முப்பஃதென்ப' என்றாற்போல யாண்டும் உடம்போடு புணர்த்து விதித்ததே சான்றாதல் அறிக. முந்நிலைக் காலமும் என்பதுபற்றி ஆசிரியர் நிகழ்காலச் சொல்லான் ஓரிடத்தும் கிளவாமையும் அறிக. 'அற்றேல் வடமொழி வழக்கோடு மாறு கொள்ளுமாலோ எனின் :—அறியாது கடாயினாய்; ஒரு மொழியுள்ளும் தேயவேற்றுமைபற்றி வேறுவேறு வழங்குதல் இயல்பாதலின், இன்னோரன்னவை மாறுகோள் அல்லவென்க.' எ-து.

எனவே 'என்மனார்' என்பது ஓர் ஆரீற்று எதிர்கால வினைமுற்று என்பதும், மன் எதிர்கால விடைநிலை என்பதும் தேற்றம். ஆகவே அது ஓர் இறந்தகால வினை முற்றென்ற சங்கரநமச்சிவாயர் கூற்றும் இலக்கணக்கொத்து நூலார் கூற்றும் தவறுதல் அறிக.

இனி, அது தொல்லாசிரியர் குறியீடு என்னும் கருத்து வகையால் இறந்தகாலத்தால் கூறுவாராய் என்மனார் என்றார் எனின் இழுக்கென்னையோ எனின், ஆசிரியர்க்கு அதுவே கருத்தாயின் அஃது ஒக்கும். அது மரபியலுட் கூறிய 'முடிந்தது காட்டல்' என்னும் உத்தியின்பாற்படும். 'உயர்திணை யென்மனார்' என்னும் சூத்திரத்து அவ்வாறு தொல்லாசிரியர் குறியீடு கூறுதல் கருத்து எனக் கூறினும் கூறலாம். ஆயினும்,

'சொல்லின் ஆகும் என்மனார் புலவர்'

'விரைந்த பொருள என்மனார் புலவர்.'

என்றாற் போல்வனவற்றுளெல்லாம் குறியீடு கூறுதற் கருத்தின்மையின், ஆண்டு அஃது இறந்த காலம் உணர்த்திய

தாகாது. அவ்வென்மனார் என்னும் சொல்லே ஒருகால் இறந்த கால வினை முற்றாகவும் ஒருகால் எதிர்கால வினை முற்றாகவும் நிற்கும் என்றலும் பொருந்தாது. ஆகவே அது யாண்டு வரினும் எதிர்கால வினை முற்றேயாம் என அறிக.

அன்றியும்,

'அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்
உளவென மொழிப இசையொடு சிவணிய
நரம்பின் மறைய என்மனார் புலவர்'

என்னும் சூத்திரத்துள் மொழிப என்பது எதிர்கால வினை முற்றேயாம். ஆகவே அதனோடு தொடர்புற அடுக்கப்பட்ட என்மனார் என்பதும் எதிர்கால வினை முற்றென்றே துணியப் படும் என்க.

இனி, என்ப என்னும் சொல் செய்யுள் விகாரம் பெற்று என்மனார் என நின்றது எனவும், என்மனார் என்பது என்ப என்னும் வினைமுற்றுத் திரிசொல் எனவும், என்மனார் என்பது செய்யுள் முடிவு எய்தி நின்றதோர் ஆரீற்று எதிர்கால முற்றுச் சொல் எனவும் கூறப்பட்ட மூன்று கொள்கைகளினுள்ளும் முதலாவது தெய்வச்சிலையாராலும் சேனாவரையராலும் மறுக்கப் பட்டது. அஃதொழிய மற்றை யிரண்டு கொள்கைகளுள்ளும் பொருத்தமுடையது யாதென்று ஆராய்தல் கடனாகும்.

செய்யுண் முடிபு.

சேனாவரையர் கோள்கையின்படி :—1 'என்மனார்' என்பது செய்யுண்முடிவு எய்தி நின்றதோர் ஆரீற்று எதிர்கால முற்றுச் சொல். 'என்றிசினோர்' 'கண்டிசினோர்' என்பன முதலாயின அவ்வாறு வந்த இறந்தகால முற்றுச்சொல்.

(2) 'ஆவு மானியற் பார்ப்பன மக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க் கருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும் எம்
அம்புகடி விடுதும் நும்மரண் சேர்மின்.' (புறம்)

எனத் திணைவிராய் வந்து முன்னிலை வினைகோடல் எற்றாற் பெறுதும் எனின் :—அங்ஙனம் செய்யுண்முடிபு எனப்படும். அவற்றை அதிகாரப் புறனடையாற்கொள்க. (சூ. 45-உரை)

(3) சினைஇ, உரைஇ, இரீஇ, உடீஇ, பராய், தூஉய், ஆய் என்பனவோவெனின் அவை செய்யுண்முடிபு என்க.
(சூ. 228-உரை)

(4) 'அழியலை,' 'அலையலை' என்னும் முன்னிலையெதிர்மறை ஐகாரம் கெட்டு அழியல் அலையல் என நிற்றலும் கொள்க......... 'புகழ்ந்தார்' என்னும் படர்க்கைவினை ஆர்ஈறுகெடப் புகழ்ந் திகுமல்லரோ என நிற்றலும் கொள்க. இவையெல்லாம் செய்யுண்முடிபு என்பாரும் உளர். (சூ. 450-உரை)

(5) கலம்பெறு கண்ணுளர் ஒக்கற்றலைவ என நின்ற ஒருமைச் சொற்போய், 'இரும்பே ரொக்கலொடு பதமிகப் பெறுகுவிர்.' என்னும் பன்மைச் சொல்லோடு முடிந்தவாறு கண்டுகொள்க.... இம்முடிபு செய்யுட்குரித்து. (சூ. 462-உரை)

'போலும்' என்பது 'போன்ம்' என வருதலும், 'நீர்க் கோழி கூப்பெயர்க்கும்' என்பது 'நீர்க்கோழி கூப்பெயர்க் குந்து' என வருதலும் செய்யுண்முடிபு என்பதே கருத்தாம்.

இளம்பூரணர் எழுத்ததிகார வுரையின்படி செய்யுண்முடிபு

(1) 'ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே.' எனச் சுட்டு நீளவருதல். (உயிர்-சூ. 6-உரை)

(2) பல—சில என்பது 'பல்லா அஞ் சிலா அம் என்மனார் புலவர்' என வருதல். (ஷை-சூ. 11-உரை)

(3) 'இறவுப் புறத்தன்ன,' 'அரவணிகொடி,' 'பிணவு நாய் முடுக்கிய' என வருதல். (ஷை-சூ. 32-உரை)

(4) 'உப்பின்று புற்கையுண்கமா—கொற்கையோனே.' என்புழி இன்றி என்னும் வினையெச்சத் திறுதி யிகரம் உகர மாய்த் திரிந்து வருதல். (ஷை-சூ. 35-உரை)

(5) ஈவயினை. (ஷை-சூ. 36-உரை)

(6) அதாஅஃறு. (ஷ-சூ. 56-உரை)
(7) 'பழூஉப்பல்லன்ன பருவுகிர்ப்பாவடி' ஷ-சூ. 59உரை
(8) 'வேணவா.' (ஷ-சூ. 86-உரை)
(9) 'விண்ணத்துக் கொட்கும்' (புள்ளி-சூ. 10-உரை)
(10) 'இலம்படு.' (ஷ-சூ. 21-உரை)
(11) 'பொலங்கலம்.' (ஷ-சூ. 61-உரை)

இதனால் செய்யுண்முடிபு இன்னவியல்பிற்று என்பது ஒருவாறு உணர்ந்து கொள்ளலாம்.

இனி, ஆராய்தல் வேண்டுவது, 'வினைமுற்றுத் திரிசோல்' என்றதன் இயல்பு. இது, இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் எனப்பட்ட நால்வகைச் சொற்களுள்ளே ஒன்றாகிய 'திரிசொல்' என்பதன் வகையே. ஆகவே அத்திரிசொல்லின் இயல்பும் அதற்கு மூலமாகிய இயற்சொல்லின் இயல்பும் திசைச்சொல் வடசொல்லின் இயல்பும் ஈண்டு ஒரு தலையான் ஆராய்தல் வேண்டப்படும். ஆசிரியர் தொல்காப்பியனும்,

'இயற்சொல் திரிசொல் திசைசொல் வடசொலென்று
அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே' என்னும்

சூத்திரத்தால், புலவர் செய்யுள் இயற்றுதற்கு உரியனவாய் வருவன இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என நான்குமேயாம் என வரையறுத்துணர்த்தி,

'அவற்றுள், இயற்சொற் றாமே,
செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித்
தம்பொருள் வழாஅமை இசைக்கும் சொல்லே.'

என்னும் சூத்திரத்தால் இயற்சொல்லியல்பு கூறி,

'ஒருபொருள் குறித்த வேறுசொல் லாகியும்
வேறுபொருள் குறித்த ஒருசொல் லாகியும்
இருபாற் றென்ப திரிசொற் கிளவி' என்னும்

சூத்திரத்தால் 'திரிசொல்' என்பதன் இயல்பு கூறினர்.

செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்
தங்குறிப் பினவே திசைச்சொற் கிளவி' என்பது

திசைச்சொல்லிலக்கணம் ஓதிய சூத்திரம்.

'வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ,
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே.'
சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்.' இவை வடசொல் வழக்கைப்பற்றிய சூத்திரம். இவற்றுள், 'இயற்சொல் என்பதன் இயல்பு திரிபின்றி இயல்பாகிய சொல் ஆகலின் இயற்சொல்லாயிற்று என்று சேனாவரையர் அதன் பொருள் விளங்க உரைத்தார். நச்சினார்க்கினியர் இளம்பூரணர் உரைக் கருததும் அதுவே.

நன்னூலார்க்கும் இலக்கண விளக்க நூலார்க்கும்* அக் கருத்தின் வேறுபாடில்லை யென்பது முறையே,
'செந்தமிழாகித் திரியாது யார்க்கும்
தம்பொருள் விளக்கும் தன்மைய இயற்சொல்.'
'செந்தமிழாகித் திரியாது யார்க்கும்
தன்பொருள் விளக்கும் தன்மையது இயற்சொல்'
என்னுஞ் சூத்திரங்களால் இனிது அறியப்படும்.

---

* நன்னூலார் 'தன்மைய இயற்சொல்' என்று பன்மை வாய்பாட்டால் ஓதியிருப்ப, இலக்கண விளக்கநூலார் அது தவறென்று கருதித் 'தன்மையது இயற்சொல்' என்று ஒருமை வாய்பாட்டால் திருத்தி ஓதினர். இவர்க்கு இயற்சொல் என்பது சாதியொருமை என்று கருத்துப் போலும். ஆயினும், பெயர், வினை, இடை, உரியென்னும் நான்கு சொல்லினும் இயற்சொல் உளவாதலின் அப்பன்மைநோக்கி, ஆசிரியர் தொல்காப்பியனர் 'இயற் சொற்றுமே' எனப் பன்மை வாய்பாட்டால் ஓதிய வாறே நன்னூலாரும் பன்மை வாய்பாட்டால் ஓதினர் என்பதை அவர் அறியார்போலும். அன்றியும் அவர், ஆசிரியர் தொல்காப்பியனர்,
'விளியெனப் படுப கொள்ளும் பெயரொடு
தெளியத் தோன்றும் இயற்கைய என்ப.'
'பெயரெனப் படுபவை தெரியுங்காலை.........
அம்மூவுருபின தோன்ற லாறே.'
'இடையெனப் படுப பெயரொடும் வினையொடு
நடை பெற்றியலும் தமக்கியல் பிலவே,' எனப்
பிறவுண்டும் எல்லாம் பன்மை வாய்பட்டால் ஓதியதன் கருத்தும், தெய்வப் புலமைத் திருவள்ளுவனர்

இனித், தெய்வச்சிலையார்க்கும் முன்னுரையாசிரியர் கருத்தின் வேறுபாடில்லையென்பது 'இயற்சொற்றாமே' என்னும் சூத்திரத்துக்கு அவர் உரைத்த உரையானும் 'இயற்சொல்' என்பதனைச் 'செஞ்சொல்' எனினும் ஒக்கும் என்று அவர் குறித்த குறிப்பானும் உணரலாகும் ஆயினும், அவர் 'இயற்சொல்' என்னும் தொகைச் சொற்பொருளை விரித்துரைப்பான் புகுந்து, 'அச்சொற்கள் எல்லா நாட்டிலும் ஒக்க இயறலின் இயற்சொல் ஆயின' என்று காரணம் கூறினர். 'இயல்' என்னும் சொற்கு ஏனைஉரையாசிரியரெல்லாம் 'இயல்பு' என்று பொருள் கொண்டிருப்பவும், இவர் மாத்திரம் 'இயலுதல்' என்று பொருள் கூறினர். பொருளதிகார வுரையாசிரியர் 'இயல்' என்பதற்கு 'இயல்பு' என்பதனோடு 'இயலுதல்' என்பதனையும் பொருத்தி உரை கூறினர். அது ஈண்டு ஒப்ப நோக்கத்தக்கது.

இயற்சொற் பாகுபாடு

இளம்பூரணர்:—பெயர் வினை இடை உரி நான்கும் உள வென்பர். பிறர் கூறுவதும் அதுவே.

இயற்சொல்லுக்கு உதாரணம்

இளம்பூரணர் காட்டியன:—சோறு, கூழ், பால், பாளிதம்.

தெய்வச்சிலையார்:—சோறு, கூழ், மலை, மரம், (பெயர்) உண்டான், தின்றான், ஓடினன், பாடினன் (வினை)

சேனாவரையர்:—நிலம், நீர், தீ, வளி, சோறு, கூழ், பால், தயிர், மக்கள், மா, தெங்கு, கமுகு என்னும் தொடக்கத்தன.

நச்சினார்க்கினியர்:—சேனாவரையர் காட்டியனவே.

'ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்.' (திருக்குறள்)

'இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே உள.' (ஷை)

என்புழிப் பன்மைவாய்பட்டால் ஓதியதன் கருத்தும் நோக்கிலர் போலும்.

இயற்சொற் குறியீடு.

'இயற்சொல்' என்பது இலக்கண நூல்களிலே ஆட்சி நோக்கிய குறியீடு. இதுபோல 'இயல்' மொழியடுத்த சொற் குறியீடுகள் இன்னும் பலவுள. அவை இயற்பெயர், இயலசை, இயற்சீர், இயன்மொழி வாழ்த்து, இயலிடம் கேட்டல், இயற்பழித்தல், இயற்படமொழிதல் முதலியனவாம்.

'கள்ளொடு சிவணும் அவ்வியற் பெயரே
கொள்வழி யுடைய பலவறி சொற்கே.' என்னும் சூத்திரவுரையிலே, அஃறிணையியற் பெயர் ஆவன ஆ, நாய், குதிரை, கழுதை, தெங்கு, பலா, மலை, கடல் என்னும் தொடக்கத்துச் சாதிப்பெயர் ஒருமைக்கும் பன்மைக்கும் பொதுவாய் நிற்றலின் இயற்பெயர் என்றார் என்பது சேனாவரையர் உரை. நச்சினார்க்கினியர் உரையும் அதுவே.

தெய்வச்சிலையார் காட்டிய உதாரணம்:—ஆ, தெங்கு—(பொருள்) இலை, பூ, (உறுப்பு) கருமை, வட்டம், (பண்பு), உண்டல், ஓடல், (தொழில்), அகம், புறம்—(இடம்) யாண்டு, திங்கள் (காலம்)

'தெரிநிலை யுடைய அஃறிணை இயற்பெயர்.'
இவை அஃறிணை இருபாற்கும் பொதுப்பெயர்.
'இயற்பெயர் சினைப்பெயர் சினைமுதற் பெயரே.'
'நான்கே இயற்பெயர் நான்கே சினைப்பெயர்.'
பெண்மை இயற்பெயர் ஆண்மை இயற்பெயர்
பன்மை இயற்பெயர் ஒருமை இயற்பெயரென்
றந்நான்கென்ப இயற்பெயர் நிலையே.' என்பன

பெயரியற் சூத்திரம். இவற்றுள் இறுதிச் சூத்திரத்தால் சாத்தி, சாத்தன், கோதை, யானை இவை இயற்சொல்லெனக் கூறப்பட்டன. இவை இருதிணைக்கும் பொதுவாகிய இயற்பெயர்.

'இறைச்சிப் பொருள்வயிற் செய்யுளுட் கிளக்கும்
இயற்பெயர்க் கிளவி உயர்திணை சுட்டா
நிலத்துவழி மருங்கிற் றோன்ற லான.' இச்சூத்திரத்

துறையில் இயற்பெயர்க்கு உதாரணமாகக் 'கடுவன்' 'மூலன்' என்பவற்றைச் சேனாவரையர் காட்டினார்; நச்சினார்க்கினியரும் அவற்றையே காட்டினார்.

தெய்வச்சிலையார் ஈண்டுக் குறிக்கப்பட்ட இயற்பெயர் என்பன, செய்யுளகத்துக் கருப்பொருளாகி, நிலத்து வழித் தோன்றும் மாவும் புள்ளும் மரமும் முதலாயவற்றின் மேல் இடுகுறியாகி வரும் இயற்பெயர் என்றார்.

உயர்திணையில் வரும் இயற்பெயர்.

ஏனாதி நல்லுதடன், முனிவன் அகத்தியன், தெய்வப் புலவன் திருவள்ளுவன், சேரமான் சேரலாதன், குருடன் கொற்றன். இவற்றுள் அகத்தியன், திருவள்ளுவன், சேரலாதன், கொற்றன் என்பன இயற் பெயர். இதனை

'சிறப்பி னாகிய பெயர்நிலைக் கிளவிக்கும்
இயற்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்.' என்னும்

சூத்திரவுரை கொண்டு அறிக.

'இயற்பெயர்க் கிளவியும் சுட்டும் பெயர்க்கிளவியும்
வினைக்கொருங் கியலும் காலம் தோன்றின்
சுட்டுப்பெயர் கிளவி முற்படக் கிளவார்
இயற்பெயர் வழிய என்மனார் புலவர்.' இச்சூத்திர

வுரையுள் இயற்பெயராகக் காட்டப்பட்டன:—சாத்தன், சாத்தி என்பன.

'இன்றிவர் என்னும் எண்ணியற் பெயரோடு' (பெயரியல் சூ. 11) இச் சூத்திரத்து இயற்பெயருக்கு ஒருவர் இருவர் என்பன உதாரணமாகக் காட்டப்பட்டன.

அச்சூத்திரத்துக் 'கூடிவருவழக்கினுடியற்பெயர்' என்பதற்குச் 'சாத்தன்மார்' என்பது தெய்வச்சிலையாராலும், பட்டி, மத்திரர் என்பது பிறவுரையாசிரியலும் காட்டப்பட்டன.

இருதிணைக்கும் பொதுவான இயற்பெயர் ஆர் என்னும் பலர் பால் விகுதி பெற்று வருவன பெருஞ்சேந்தனார், முட்டவனார், முடத்தாமக் காமக் கண்ணியார், தந்தையார் என்பன.

அஃறிணையிருபாற்கும் பொதுவான இயற்பெயர்— நரியார், கிளியார் முதலியன. இவை,

'இயற்பெயர் முன்னர் ஆரைக் கிளவி
பலர்க்குரி யெழுத்தின் வினையொடு முடிமே' என்னும் சூத்திரவுரையில் காட்டப்பட்டன.

'கோச் சேரமான் யானைக்கட் சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை' என்புழிச் 'சேய்' என்பது இயற்பெயர். (திருக்குறள் 355 பரிமேலழகர் உரை)

'உயர்திணையியற்பெயர் அஃறிணையியற்பெயர்' (இ-கொ-130) இதன் உரையில் உயர்திணையியற்பெயர்க்குக் காட்டிய உதாரணம் :—இறை, கோ, வேந்து, அரசு, அமைச்சு, கவி, பெண்டு வேசை, உமை, தையல், பேதை, பெதும்பை முதலாயின.

இனி இயற்பெயர் என்னும் குறியீடு ஆகுபெயர்க்கு முதலாகவுள்ள பெயர்க்கும் உண்டு. இதனை 'முதலிற் கூறும் சினையறி கிளவியும்' என்னும் சூத்திரத்துரையுள், 'இயற்பெயர் ஆகுபெயரெனப் பெயர் இரண்டாய் அடங்கும் வழி' என்னும் சேனாவரையர் உரைக்குறிப்பினாலும் அதனைச் சுட்டிச் சிவஞான முனிவர் சூத்திர விருத்தியுள் உரைத்தவாற்றானும் அறிக.

இனி, 'இயலசை முதலிரண்டு ஏனைய உரியசை' என்னும் செய்யுளியற் சூத்திரவுரையிலே, 'முதற்கண் நின்ற நேரும் நிரையும் இயற்றிக் கொள்ளப்படாது ; இயற்கை வகையான் நின்றாங்கு நின்று தளைப்பனவாம்........இயற்கையால் இயறலின் இயலசை' என்று கூறினர் பேராசிரியர்.

'இயலசை மயக்கம் இயற்சீர் ஏனை
உரியசை மயக்கம் ஆசிரிய வுரிச்சீர்' என்னும்

அவ்வியற் சூத்திரவுரையிலே. அப்பேராசிரியர் கூறியது 'இயல்பு வகையான் ஒரோவொன்றாகி நின்ற சொற்கள் வருதல் பெரும்பான்மை யாகலானும், நான்கு பாவிற்கும் பொதுவாகி இயன்று வருதலானும், இயலசையான்வரும் ஈரசைச்சீர் ஆகலானும், இவற்றை ஒருபாவிற்கு உரிமை கூறுதல் அரிது ஆகலானும் இவற்றை இயற்சீர் என்றான்' என்பது.

'கொடுப்போர் ஏத்திக் கொடாஅர்ப் பழித்தலும்' என்னும் புறத்திணையியற் சூத்திரத்து 'அடுத்தூர்ந்தேத்திய இயன்மொழி வாழ்த்தும்' என்பதன் உரையிலே, 'இக்குடிப் பிறந்தோர்க்கெல்லாம் இக்குணங்கள் இயல்பென்றும், அவற்றை நீயும் இயல்பாக உடையையென்றும், அன்னோர் போல நீயும் இயல்பாக ஈயென்றும், உயர்ந்தோர் கூறி அவனை வாழ்த்தலின் இயன்மொழிவாழ்த்து ஆயிற்று' என்று நச்சினார்க்கினியர் கூறினர். எனைக் குறியீடுகளின் பொருளையும் அறிந்துகொள்க.

(தொடரும்.)

ஐயம்.

கொங்கு நாட்டுச்சரித்திரம் எழுதி வருகிறேன். இதற்காக அங்கங்கே சென்று பழய வரலாறுகள் விசாரித்து வருங் காலத்து, சமத்தூர் பாளயகாரரவர்களிடம் ஒரு தாம்பிர சாசனம் இருந்தது. அதனிடையே ஒரு வெண்பா நோக்கினேன்.

"கொங்குமலை நாடுங் குளிர்ந்தநதி பன்னிரண்டுஞ்
சங்கரனார் தெய்வத் தலமேழும்—பங்கயஞ்சேர்
வஞ்சிநகர் நாலும் வளமையா ஆண்டருளுங்
கஞ்சமலர்க் கையுடையோன் காண்."

......................நாலு வஞ்சி சேரப்படைத்த சேரமான் பெருமாளையனவர்கள் என்றுளது.

பன்னிரண்டு நதிகள், நான்கு வஞ்சிநகரம் என்பவற்றின் விபரம் தெரிந்த அறிஞர்கள் பத்திரிகை மூலமாக வேனும், கடித மூலமாக வேனும் தயவு செய்து தெரிவிப்பார்களெனக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தி. அ. முத்துசாமிக் கோனார்
சைவசமாஜம், திருச்செங்கோடு.